கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

முன்னிலை - திரு. S. ராஜசிம்மவர்மன், பி.ஏ., பி.எல் ( Hons),
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056 தமிழ் விசுவாவசுஆண்டு மாசி மாதம் 22 ம் நாள்

( முதல் நிலை பதிவேடு வழக்கு எண். 11/2021 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விக்கிரவாண்டி )

( விக்கிரவாண்டி காவல் நிலைய குற்ற எண். 221/2021 )

**அமர்வு வழக்கு எண் . 375 / 2021**

**(CNR NO. TNVP 01- 001216 – 2021 )**

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசுக்காக | - | காவல் ஆய்வாளர்,<br>விக்கிரவாண்டி காவல் நிலைய<br>குற்ற எண். 221/2021 |
| 2. | குற்றம்சாட்டவர்கள் பெயர், வயது, வேலை, தந்தை பெயர் மற்றும் முகவரி | | 1. சரத்குமார் வயது 23<br>த/பெ. சரவணன்<br>2. சரவணன் வயது 47<br>த/பெ. காத்தவராயன்<br>3. குமரவேல் வயது 47,<br>த/பெ. கிருஷ்ணன்<br>4. ஜானகி வயது 44<br>க/பெ. குமரவேல்<br>அனைவரின் வசிப்பிடம்<br>பிள்ளையார் கோவில் தெரு,<br>சிவபெருமான்பாளையம் கிராமம்,<br>விக்கிரவாண்டி வட்டம். |
| 3. | சம்பவ நாள் | : | 22.04.2021 |

| | | | |
|---|---|---|---|
| 4. | புகார் நாள் | | 25.04.2021 |
| 5. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1 வது எதிரி - 26.04.2021<br>2 வது எதிரி - 26.04.2021<br>3 வது எதிரி - 26.04.2021<br>4 வது எதிரி - 26.04.2021 |
| 6. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | 1 வது எதிரி - 27.07.2021<br>2 வது எதிரி - 27.07.2021<br>3 வது எதிரி - 06.07.2021<br>4 வது எதிரி - 06.07.2021 |
| 7. | எதிரிகள் மீதான குற்றச்சாட்டு | : | எதிரிகள் மீது இதச பிரிவுகள். 120(பி), 364, 294(பி), 341, 302 .324, 364 உ/இ. 109, 302 உ/இ. 34 ன் கீழ் |
| 8. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | | எதிரிகள் மீது இதச பிரிவுகள். 364, 294(பி), 341, 302 .324, 364 உ/இ. 109, 302 உ/இ. 34 ன் கீழ் |
| 9. | எதிரிகளின் பதில் | | குற்றவாளிகள் இல்லை. |
| 10 | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | - | 16.04.2021 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | | 09.10.2025 |
| 12. | நீதிமன்றத்தின் தீர்மானம் | | எதிரிகள் இதச பிரிவுகள். 364, , 341, 302 .324, 352, 302 உ/இ. 34 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என முடிவு செய்யப்பட்டுள்ளது. |
| 13. | நீதிமன்றத்தின் தீர்ப்பும் | - | 1 வது எதிரி இதச பிரிவு. 302 ன் |

| | | | |
|---|---|---|---|
| | தண்டனையும், | | படி குற்றவாளி என தீர்மானித்து, இதச பிரிவு. 302 ன் படியான குற்றச்சாட்டிற்கு 1வது எதிரிக்கு ஆயுட்கால சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ. 10,000/-விதித்தும், அபராதம் கட்ட தவறினால், 6 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், 2 முதல் 4 எதிரிகள் இதச பிரிவு. 302 உ/இ. 34 ன் படி குற்றவாளிகள் என தீர்மானித்து, இதச பிரிவு. 302 உ/இ. 34 ன் படியான குற்றச்சாட்டிற்கு 2 முதல் 4 எதிரிகள் ஒவ்வொருவருக்கும் ஆயுட்கால சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.10000/-விதித்தும், அபராதம் கட்ட தவறினால், 6 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும்,<br>1, 2 எதிரிகள் இதச பிரிவு. 364 ன் படி குற்றவாளி என தீர்மானித்து, இதச பிரிவு. 364 ன் படியான குற்றச்சாட்டிற்கு 1, 2 எதிரிகளுக்கு ஆயுட்கால சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ. 10,000/- விதித்தும், அபராதம் கட்ட தவறினால், 6 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும்,<br>2 முதல் 4 எதிரிகள் இதச |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரிவு. 324 ன் படி குற்றவாளி என தீர்மானித்து 2 முதல் 4 எதிரிகளுக்கு இதச பிரிவு. 324 ன் படியான குற்றச்சாட்டிற்கு தலா 2 வருடம் மெய்காவல்சிறை தண்டனை வழங்கியும், அபராதம் ரூ. 10,000/- விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் 2 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், 3 மற்றும் 4 எதிரிகள் இதச பிரிவு. 352 ன் படி குற்றவாளி என தீர்மானித்து இதச பிரிவு. 352 ன் படியான குற்றச்சாட்டிற்கு தலா 3 மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும்,<br>1 முதல் 4 எதிரிகள் இதச பிரிவு. 341 ன் படி குற்றவாளி என தீர்மானித்து இதச பிரிவு. 341 ன்படியான குற்றச்சாட்டிற்கு 1 மாதம் மெய்காவல்சிறை தண்டனை விதித்தும் கு.வி.மு.ச.பிரிவு 235(2) -ன் படி தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>மொத்த அபராத<br>தொகை ரூ. 90,000/-<br>மேற்படி தண்டனைகளை 1 முதல் 4 எதிரிகள் ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் செலுத்தியுள்ள அபராத |

| | | | |
|---|---|---|---|
| | | | தொகையை மேல்முறையீட்டு காலம் முடிந்த பிறகு இந்த வழக்கில் கொலை செய்யப்பட்டு இறந்துபோன அய்யப்பன் என்பவரின் மற்ற வாரிசுகளுக்கு ரூ. 80000 /- இழப்பீடாக வழங்க வேண்டும் என்று கு.வி.மு.ச. 357(A) படி உத்தரவிடப்படுகிறது. மேலும் இழப்பீடு பெறுவதற்காக விழுப்புரம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு இந்த விவகாரத்தை அனுப்ப உத்தரவிடப்படுகிறது. |
| 14. | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்ட நாள் | | **06.03.2026** |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | | இல்லை |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக 20.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு.இரா.சுப்பராயலு அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். பொன்னுரங்கம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ...

## தீர்ப்புரை

இவ்வழக்கின் சம்பவத்தில் கொலையுண்ட அய்யப்பன், வயது 44/2021 த/பெ.குப்பன் என்பவர் விக்கிரவாண்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சிவபெருமான்பாளையம் கிராமம் கெங்கையம்மன் கோவில் தெருவில் வசித்து வந்தவர் ஆவார் அதே ஊரைச் சேர்ந்த 2 வது எதிரி சரவணனுக்கு கொலையுண்ட அய்யப்பன் சித்தப்பா மகன் ஆவார் என்றும், மேற்படி 2-வது எதிரியின் மனைவி விஜயகுமாரிக்கும், மேற்படி அய்யப்பனின் மனைவியான சங்கதிகளின்படியான புகார்தாரர் நதியாவிற்கும் அடிக்கடி பிரச்சனைகள் ஏற்பட்ட நிலையில் சம்பவத்திற்கு 4 நாட்கள் முன்பு பிரச்சினை ஏற்பட்டும், சாட்சி நதியா தன் தாய் வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும், இதனால் ஆத்திரமுற்ற மேற்படி அய்யப்பன் கடந்த 22.04 2021 பிற்பகல் 12.00 மணிக்கு 2 வது எதிரியின் மனைவி விஜயகுமாரியை தாக்கி பலத்த காயத்தை விளைவித்து தலைமறைவாகியுள்ளார் என்றும், இதனை தொடர்ந்து அன்று 22.04.2021 விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சையில் விஜயகுமாரி இருந்த போது அங்கு 2-வது எதிரியுடன் அவரது மகன்களான 1 வது எதிரி சரத்குமார் மற்றும் மைத்துனரான 3-வது எதிரி குமரவேல் ஆகிய மூவரும் அய்யப்பனை தேடி கண்டுபிடித்து கொலை செய்ய குற்றமுறு சதிதிட்டம் தீட்டியுள்ளனர், மேலும் 1 வது எதிரி அய்யப்பனை பல இடங்களில் தேடி வந்துள்ளார் என்றும்,

இதன் தொடர்ச்சியாக கடந்த 25/04/2021 அன்று 1 வது எதிரியானவர் 2 வது எதிரியுடன் புதுச்சேரி மாநிலம் திருக்கனூர் ஏரிக்கரையில் ஆலமரத்தடியில் தங்கியிருந்த அய்யப்பனை கொலை செய்யும் நோக்கில் அன்று காலை 11.00 மணிக்கு PY 05 H 1570 பதிவெண் உடைய இருசக்கர வாகனத்தில் நடுவில் அமர வைத்து 2 வது எதிரி பிடித்து

கொள்ள 1வது எதிரியானவர் இருசக்கர வாகனத்தை ஓட்டியும், கடத்தி அழைத்து கொண்டு,

அன்று பிற்பகல் 12.00 மணிக்கு சிவபெருமான்பாளையம் பிள்ளை கோவில் தெருவில் முனியம்மாள் என்பவர் புதிதாக கட்டிவரும் வீட்டில் முன்பு கொண்டு வந்தும், ரோட்டில் வைத்து அய்யப்பனை கொலை செய்யும் பொதுவான நோக்கத்துடன் (common intention) 1 முதல் 4 எதிரிகள் ஒன்று சேர்ந்தும், 1வது எதிரியானவர் "டேய் தேவிடியா பையா எப்படிடா என் அம்மாவை அடிப்ப" என்று சொல்லி மரக்கட்டிலின் கால்கட்டையால் "இத்தோடு செத்து ஒழிந்து போடா" என்று சொல்லி அய்யப்பனின் இடது காதின் பின்புறமாக இடது பின்தலை மற்றும் உடம்பில் அடித்தும், 2வது எதிரியானவர் "தேவிடியா மவனே" என்று திட்டி இரும்பு ஸ்பேனரால் இடது தாடை, மேல், கீழ் உதடு, வலது உள்ளங்கையில் பலமாக அடித்து காயப்படுத்தியும், தடுக்க வந்த சாட்சி நதியாவை 3, 4 எதிரிகள் தடுத்து தள்ளிவிட்டுள்ளனர் என்றும், அதுசமயம் ஓடிய அய்யப்பனை 3, 4 எதிரிகள் "எங்கடா ஓடற தேவிடியா பையா என திட்டி அருகில் பழனி என்பவரது வீட்டின் பின்புற இடத்தில் தடுத்து பிடித்து தள்ளியும், 3 வது எதிரி தடியால் உடம்பு முழுவதும் அடித்தும், 4வது எதிரி கையாலும்,காலாலும் தாக்கியுள்ளனர் என்றும், மேலும் தொடர்ச்சியாக 1 முதல் 4 எதிரிகள் அய்யப்பனை அங்கிருந்த பிள்ளையார் கோவில் வாட்டர் டேங்க் அருகில் சட்டவிரோதமாக தடுத்து கொண்டு சென்றும், 1 முதல் 4 எதிரிகள் தாக்கி பலத்த காயங்களை விளைவித்துள்ளனர் என்றும், இதனை தொடர்ந்து மேற்படி அய்யப்பன் விழுப்புரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அன்றே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி

26.04.2021 அதிகாலை 1.00 மணிக்கு மரணமுற்றுள்ளார் என்றும், மேற்படி அய்யப்பனுக்கு இவ்வழக்கு சம்பவத்தில் தலையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக மரணம் நிகழ்ந்துள்ளது என்றும், இவ்வாறாக 1 முதல் 4 எதிரிகளால் அய்யப்பன் கொலை செய்யப்பட்டுள்ளார் (Died due to effects of Head injuries sustained) என்றும், எனவே 1 வது எதிரி பிரிவுகள்.120B, 364, 294, 341, 302 இ.த.ச.வின் படியும், 2-வது எதிரி பிரிவுகள்,120B, 364, 294(b), 341, 324, 302 r/w 34 இ.த.ச.வின் படியும், 3-வது எதிரியானவர் பிரிவுகள். 120B, 294(பி), 341, 352, 324, 364 r/w 109, 302 r/w 34 இதசவின் படியும், 4-வது எதிரியானவர் பிரிவுகள்.294 (b), 341, 352, 323, 302 r/w. 34 இ.த.ச.படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக விக்கிரவாண்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வழக்கை பதிவு செய்தல் மற்றும் புலன் விசாரணை செய்தல்:-**

கடந்த 25.04.2021 அன்று இரவு 08.30 மணியளவில் அ.சா.14 காவல் உதவி ஆய்வாளர் பணியில் இருந்த போது, விக்கிரவாண்டி தாலுக்கா, சிவபெருமான்பாளையத்தை சேர்ந்த ஐயப்பன் மனைவி நதியா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரை பெற்று, விக்கிரவாண்டி காவல் நிலைய குற்ற எண்.221/2021 இந்திய தண்டனைச் சட்ட பிரிவுகள்.294(பி), 364, 323, 324, 307-ன் படி அ.சா.ஆ.17 முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும், அதன் பிறகு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர்கள், மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். இந்த வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்து

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவ இடத்தில் எதிரிகள் பயன்படுத்திய தடயங்களை சேகரித்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். எதிரிகளை கைது செய்து, காவலுக்கு உட்படுத்தியும், பிறகு சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்து, மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அதன் பிறகு தனது புலன் விசாரணையை முடித்துவிட்டு, இந்த வழக்கின் எதிரிகளுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள்.120B, 364, 294(b), 341, 324, 302 r/w 34 பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**3) வழக்கை புலன் கொள்ளுதல் மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் :-**

இந்த வழக்கு ஆவணங்களை பரிசீலித்த வகையில், கற்றறிந்த விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண்-1 அவர்கள் இந்த வழக்கை PRC.NO.11/2021 ஆக கோப்பிற்கு எடுத்து, சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கி, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 120(பி), 364, 302 -ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்க கூடியது என்பதால், குற்றவியல் விசாரணை முறை சட்டம் 209-அ-வின் படி இந்த வழக்கு மேல் விசாரணைக்காக விழுப்புரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**4) விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் :-**

இவ்வழக்கானது விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்ற **D.No. 8476/2021 நாள். 22.10.2021** தேதிய உத்தரவுபடி வழக்கு கோப்புகள் அனுப்பப்பட்டு, பின் கூடுதல் மாவட்ட நீதி**மன்றத்திற்கு** வழக்கு கோப்புகள் அனுப்பப்பட்டு, 28.10.2021 அன்று இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளது.

**5) குற்றச்சாட்டுக்கள் வனைதல் தொடர்பான நடவடிக்கைகள்**:-

கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் இந்த அமர்வு வழக்கை குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 226-ன் கீழ் திறப்பு செய்தார். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞரும் ஆஜரானார். எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுத்தும், இந்த வழக்கில் எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைய போதிய முகாந்திரம் இருந்ததால், எதிரிகள் மீது 06/12/2021 தேதியில் கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 வது குற்றச்சாட்டு | குற்றமுறு சதிதிட்டம் தீட்டுதல் | இ.த.ச. பிரிவு 120B(1) ன் கீழ் | 1 முதல் 3 எதிரிகள் மீது |
| 2 வது குற்றச்சாட்டு | வழி மறித்தல் | இ.த.ச பிரிவு 341 -ன் கீழ் | 1 முதல் 4 எதிரிகள் மீது |
| 3 வது குற்றச்சாட்டு | பொது இடத்தில் ஆபாச வார்த்தைகளால் திட்டுதல் | இ.த.ச. பிரிவு 294(b)-ன் கீழ் | 1 முதல் 4 எதிரிகள் மீது |
| 4 வது குற்றச்சாட்டு | கொலை செய்ய கடத்தி செல்லுதல் | இ.த.ச பிரிவு 364 ன் கீழ் | 1, 2 எதிரிகள் மீது |
| 5 வது குற்றச்சாட்டு | அபாயகரமான ஆயுதங்களால் தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்துதல். | இ.த.ச. பிரிவு 324 -ன் கீழ் | 2 முதல் 4 எதிரிகள் மீது |
| 6 வது குற்றச்சாட்டு | ஆத்திரமுட்டி தாக்குதல் | இ.த.ச. பிரிவு 352 -ன் கீழ் | 3 மற்றும் 4 எதிரிகள் மீது |
| 7 வது குற்றச்சாட்டு | கொலைக்குற்றம் புரிதல் | இ.த.ச. பிரிவு 302 -ன் கீழ் | 1 வது எதிரி மீது |
| 8 வது | கொலைக் | இ.த.ச. பிரிவு | |

| | | | |
|---|---|---|---|
| குற்றச்சாட்டு | குற்றத்திற்கு உடந்தையாக இருத்தல். | 302 உ/இ 34-ன் கீழ், | 2 முதல் 4 எதிரிகள் மீது |

மேற்படி இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள்.120B(1), 341, 294(b), 364, 324, 352, 302, 302 உ/இ 34-ன்கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து அவற்றின் சாராம்சத்தை எதிரிகளுக்கு தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் அவற்றை மறுத்து குற்றவாளிகள் அல்ல என்று தெரிவித்தனர். அதனால் இந்த வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. அதனால் இந்த வழக்கு தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டது.

**6) வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் குறித்த விவரம் :-**

இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க வேண்டி, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.15 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.37 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருட்கள் 1 முதல் 11 வரையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7) அரசு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களில் இருந்து தெரியவரும் அரசு தரப்பின் விவரங்கள் பின்வருமாறு:-**

**A) அ.சா.1-ன் சாட்சியம் :-**

அசா.1 திருமதி. நதியா தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுவை மாநிலம் பண்டசோழன் நல்லூர் கிராமத்தில் தனது தாய்வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றும், விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், 2021-ம் வருடம் தனது மாமியார் வீடான சிவபெருமான்பாளையத்தில் தனது கணவருடன் குடியிருந்து வந்தேன் என்றும், இந்த வழக்கில் இறந்துபோன ஐயப்பன் தனது கணவர் என்றும், ஆஜர் எதிரிகள் மற்றும் 3 வது எதிரி குமாரவேல் ஆகியோரை எனக்குத் தெரியும் என்றும், 2 வது எதிரி சரவணன், 4 வது எதிரி ஜானகி ஆகியோர் தனது கணவரின் பெரியப்பா பிள்ளைகள் என்றும், 1 வது எதிரி சரத்குமார் 2 வது எதிரியின் மகன் என்றும், 3 வது எதிரி 4 வது எதிரியின் கணவர் என்றும், 2 வது எதிரி சரவணனின் மனைவியான விஜயகுமாரி என்பவர் தன்னை பற்றி தனது கணவரிடம் தவறாக சொல்லிவிட்டார் என்றும், அதனால் தனது கணவர் தன்னிடம் சண்டை போட்டு வந்தார் என்றும், அதனால் தான் தனது பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தனது அம்மா வீட்டிற்கு பண்டசோழ நல்லூர் சென்றுவிட்டேன் என்றும், தங்கள் வீட்டிற்கு பக்கத்தில்தான் சரவணன் வீட்டார் மாடுகளை கட்டுவார்கள் என்றும், விஜயகுமாரி மாடு கட்டும்போது தனது கணவர் நீ தனது மனைவியை பற்றி தவறாக சொன்னதால்தான் சண்டை வந்து தனது மனைவி பிரிந்து சென்றுவிட்டாள் என்று சொல்லி தனது கணவர் விஜயகுமாரியிடம் சண்டை போட்டுள்ளார் என்றும், தனது கணவர் தள்ளிவிட்டதில் விஜயகுமாரிக்கு தலையில் அடிபட்டது என்றும், தனது கணவர் தனது அண்ணனுக்கு போன் செய்து சண்டை வந்ததாகவும், தான் தள்ளி விட்டதில் விஜயகுமாரிக்கு

அடிபட்டதாகவும் சொன்னார் என்றும், அதனால் தனது அண்ணன் ஜெயகணேஷ் தன்னை அழைத்து கொண்டு வந்து தனது கணவர் வீட்டில் விட்டுவிட்டார் என்றும், தனது கணவர் நடந்த சம்பவத்தை தன்னிடம் சொன்னார் என்றும், 22/04/2021ம் தேதி சாயந்திரம் 6, 7 மணியளவில் தனது கணவர் வீட்டை விட்டு வெளியே சென்றார் என்றும், அன்று இரவு முழுவதும் வரவில்லை என்றும், மறுநாளும் வரவில்லை என்றும், எனவே தான் காலையிலேயே தனது தாய் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், அங்கு இருந்துவிட்டு தனது கணவர் குறித்த தகவல் இல்லாததால் மறுநாள் தனது அண்ணனை அழைத்து கொண்டு தனது கணவர் வீட்டிற்கு வந்தேன் என்றும், வீட்டில் தனது கணவரும் இல்லை என்றும், 25.04.2021-ம் தேதி மதியம் 12.00 மணியளவில் தங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள விநாயகர் கோவில் அருகில் சத்தம் கேட்டது என்றும், அதனால் தான் வீட்டில் இருந்து அங்கு ஓடி சென்று பார்த்தேன் என்றும், முனியம்மாள் புதிதாக கட்டி வந்த வீடு அருகில் வைத்து சரத்குமார், சரவணன், ஜானகி, குமாரவேல் ஆகியோர் தனது கணவரை மடக்கி எதிரி சரத்குமார் தன் கையில் வைத்திருந்த கட்டில் காலால் தனது கணவரின் தலையின் பின்புறம் அடித்தார் என்றும், 2 வது எதிரி சரவணன் நட்டு கழற்ற உதவும் ஸ்பேனரால் தனது கணவரின் வாயில் அடித்து தனது கணவரின் பல் எல்லாம் கொட்டி விட்டது என்றும், தனது கணவரின் கையிலும் எதிரி சரவணன் ஸ்பேனரால் அடித்தார் என்றும், தான் போய் தடுத்தேன் என்றும், அப்போது 3 வது எதிரி குமாரவேல், 4 வது எதிரி ஜானகி தன்னை மறித்து தள்ளிவிட்டார்கள் என்றும், அடி தாங்க முடியாமல் ஓடிய தனது கணவர் முனியம்மாள் வீட்டு பக்கத்திலேயே உள்ள வீட்டு அருகில் எதிரிகள் கும்பலாக மடக்கி தனது கணவரை செம அடி அடித்துவிட்டார்கள் என்றும், அங்கிருந்தவர்கள் இங்கு

வைத்து அடிக்காதீர்கள் என்று சொன்னார்கள் என்றும், தனது கணவரின் விநாயகர் கோவிலுக்கு அருகில் உள்ள தண்ணீர் டேங்க் அருகில் இழுத்து சென்றார்கள் என்றும், தனது கணவரை ஜட்டியுடன் நிற்க வைத்து தண்ணீரை ஊற்றி ஊற்றி 1 முதல் 4 எதிரிகள் அடித்தார்கள் என்றும், முக்கியமாக எதிரி சரத்குமார் ஒரு பந்தை காலால் அடிப்பதை போல் தனது கணவரை மாறி மாறி அடித்தார்கள் என்றும், (சாட்சி கண் கலங்குகிறார்) கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோர் வந்து விலக்கிவிட முயற்சி செய்தார்கள் என்றும், எல்லோரும் கூடுவதை பார்த்த எதிரிகள் ஆயுதங்களுடன் அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், தான் ஆம்புலன்ஸ் வரவழைத்து தனது கணவரை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றும், தனது கணவர் மருத்துவமனையில் தனது கணவர் சிகிச்சையில் இருக்கும்போது அவரிடம் விசாரித்தபோது எதிரிகளுக்கு பயந்து தான் திருக்கனூர், ஏரிக்கரையில் மறைந்து இருந்ததாக தன்னிடம் சொன்னார் என்றும், தனது கணவர் அங்கு இருப்பதை 1வது எதிரி சரத்குமார், 2வது எதிரி சரவணன், ஆகியோர் சரத்குமாரின் இருசக்கரவாகனத்தில் அங்கு சென்று தனது கணவரை பிடித்து கொண்டு வந்து தங்கள் வீட்டு அருகில் வைத்து தாக்கியதாக சொன்னார் என்றும், தனது கணவர் தாக்கப்பட்ட அன்று இரவு 1.00 மணிக்கு தனது கணவர் இறந்துவிட்டார் என்றும், தான் காலையில் விக்கிரவாண்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும், தான் கொடுத்த புகார் அசா.ஆ. 1. என்றும், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், எதிரி சம்பவத்தின் போது பயன்படுத்திய ஆயுதங்களை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், 1வது எதிரி சரத்குமார் சம்பவத்தின்போது பயன்படுத்திய கட்டில் கால் தன்னிடம் காட்டப்படுகிறது என்றும்,

அ.சா.பொ-1. சம்பவத்தின்போது 3 வது எதிரி குமாரவேல் பயன்படுத்திய கட்டை தன்னிடம் காட்டப்படுகிறது என்றும், அது அ.சா.பொ.2. என்றும், 2 வது எதிரி சரவணன் சம்பவத்தின்போது பயன்படுத்திய ஸ்பேனர் தன்னிடம் காட்டப்படுகிறது என்றும், அது அ.சா.பொ.3. போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**B)அ.சா.2-ன் சாட்சியம்:-**

அசா. 2 திரு. கோபாலகிருஷ்ணன் தனது சாட்சியத்தில், தான் சிவபெருமான்பாளையத்தில் வசித்து வருகிறேன் என்றும், தச்சு ஆசாரி வேலை செய்கிறேன் என்றும், அசா.1 நதியா என்பவரை எனக்கு தெரியும் என்றும், அவர் தனது மாமியாரின் தம்பி மனைவி ஆவார் என்றும், அசா.1 கணவரான இவ்வழக்கில் இறந்த ஐயப்பனை எனக்கு தெரியும் என்றும், ஆஜர் 1, 2, 4 எதிரிகள் மற்றும் 3 வது எதிரி குமாரவேல் ஆகியோரை எனக்கு தெரியும் என்றும், 22.04.2021-ந் தேதி காலையில் ஐயப்பனுக்கும், 2 வது எதிரி சரவணனுக்கும், ஐயப்பன் வீட்டு அருகில் உள்ள சரவணனுடைய மாட்டுக்கொட்டை அருகில் காலை 7, 7.30 மணியளவில் வாய் வேலைக்கு தகராறு நடந்தது என்றும், அதைப்பார்த்த தான் சென்றுவிட்டேன் என்றும், ஏன் தகராறு செய்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், சரவணனின் மனைவியை ஐயப்பன் அடித்துவிட்டார் என்று அன்று மாலை தான் வேலை முடித்துவரும்போது தான் கேள்விப்பட்டேன் என்றும், ஆனால் ஐயப்பன் அவரது மனைவியை சந்தித்து சொல்லியுள்ளார் என்றும், அதனால், அவர்கள் இருவருக்குள்ளும் தகராறு நடந்துள்ளது என்றும், அன்று இரவில் இருந்து ஐயப்பனை

காணவில்லை என்றும், ஐயப்பனை தேடி அவரது மனைவி அசா.1 தனது குழந்தைகளுடன் சென்றுவிட்டார் என்றும், தனது தாய் வீட்டிற்கு முனியம்மாள் அதன்பிறகு 25.04.2021-ந் தேதி பகல் 12.00 மணியளவில் எதிரிகள் சரத்குமார், சரவணன் ஆகியோர் ஐயப்பனை ஒரு பைக்கில் அடித்து அழைத்து தங்கள் ஊருக்குள் வந்தார்கள் என்றும், வீட்டு அருகில் வைத்து ஒரு உடைந்த கட்டில் கால் கொண்டு 1 வது எதிரி சரத்குமார் ஐயப்பனின் தலையில் அடித்தார் என்றும், 2 வது எதிரி சரவணன் ஒரு ஸ்பேனரை கொண்டு ஐயப்பனின் பல்லில் முதலில் அடித்தார் என்றும், அதன்பிறகு, ஐயப்பனின் கையிலும், 2 வது எதிரி சரவணன் அடித்தார் என்றும், பைக்கில் ஐயப்பனை எதிரிகள் பிள்ளையார்கோவில் இருந்து தான் அழைத்துவரும்போது அவர்களை தொடர்ந்து வந்தேன் என்றும், அதனால், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், ஐயப்பனை தாக்கிய பிறகு 3 வது எதிரி குமாரவேல் 4 வது எதிரி ஜானகி ஆகியோர் அங்கு வந்துவிட்டார்கள் என்றும், அசா.1 நதியா கத்திக்கொண்டே ஓடி வந்தார் என்றும், அவரை 3, 4 எதிரிகள் வழிமறித்து தள்ளிவிட்டார்கள் என்றும், வலி பொறுக்கமுடியாமல் ஐயப்பன் அங்கிருந்து ஓடி பழனி வீட்டு அருகில் விழுந்தார் என்றும், அங்கு எதிரிகள் 4 பேரும் சேர்ந்து ஐயப்பனை அடித்தார்கள் என்றும், அவர் மயக்கம் அடைந்துவிடாதபடி அங்கு பிடித்து வைக்கப்பட்டிருந்த தண்ணீர் ஊற்றி அடித்தார்கள் என்றும், அங்கு இருந்தவர்கள் சத்தம் போட்டதால், 1, 2 எதிரிகள் ஐயப்பனை தரதரவென்று ஜட்டியோடு இழுத்து பிள்ளையார் கோவில் வாட்டர் டேங்க் அருகில் அழைத்து சென்றார்கள் என்றும், அங்கு வைத்தும் எதிரிகள் 4 பேரும் ஐயப்பனை அடித்தார்கள் என்றும், அப்போது தான் அவர்களை தடுத்துப்பார்த்தேன் என்றும், முடியவில்லை என்றும், தன்னை கெட்டவார்த்தைகளால் பேசியதால்,

அங்கிருந்து சென்று பிரகாஷ் என்பவரை தான் அங்கு அழைத்து வந்தேன் என்றும், மனைவி எதிரிகள் தனது நண்பர் ஐயப்பனின் மற்றும் கும்பல் வந்ததாலும், எதிரிகள் ஆயுதங்களுடன் அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், 108 ஆம்புலன்சிற்கு நாங்கள் போன் செய்தோம் என்றும், யார் போன் செய்தார் என்று குறிப்பாக தெரியவில்லை என்றும், மாலை 4, 4.30 மணியளவில் ஆம்புலன்ஸ் வந்தது என்றும், தான் ஆம்புலன்சில் ஐயப்பனையும், அவரது மனைவியையும் அனுப்பிவிட்டேன் என்றும், ஒரு நாள் பங்க்ஷனுக்கு சென்றுவிட்டேன் என்றும், அன்றிரவு சுமார் 12.30 மணியளவில் அசா.1 நதியா தனக்கு போன் செய்து ஐயப்பனுக்கு சிகிச்சை அளிக்கிறார்கள் என்று சொன்னார் என்றும், ஆனால், இரவு 10.00 மணியளவில் மீண்டும் போன் செய்து அசா.1 நதியா ஐயப்பன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார் என்றும், என்னிடம் காட்டப்படும் அசா.பொ.1 கட்டில் கால் சம்பவத்தில் 1 வது எதிரி பயன்படுத்தியது என்றும், அ.சா.பொ.2 ஸ்பேனர் சம்பவத்தில் 2 வது எதிரி பயன்படுத்தியது ஆகும். அ.சா.பொ.3 கட்டை சம்பவத்தில் 3 வது எதிரி பயன்படுத்தியது ஆகும். அ.சா.1 நதியா தகவல் சொன்னபிறகு அரை மணி நேரத்தில் தான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன் என்றும், ஐயப்பன் தாக்கப்பட்ட அன்று இரவு 8.30 மணியளவில் அசா.1 நதியா புகார் கொடுக்க விக்கிரவாண்டி காவல்நிலையம் சென்று வந்ததாக அன்று இரவில் போன் செய்யும்போது தன்னிடம் சொன்னார் என்றும், இந்த சம்பவம் குறித்து போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**C)அ.சா.3 -ன் சாட்சியம்:-**

அ.சா.3.திரு.ராஜா தனது சாட்சியத்தில், தான் சிவபெருமான்பாளையம் கிராமத்தில்

வசித்து வருகிறேன் என்றும், அசா.1 நதியா தனது அத்தை என்றும், அசா.2 கோபாலகிருஷ்ணன் தாய்மாமன் இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பன் ஆசாரியின் கணவர் என்றும், ஆஜர் எதிரிகள் நால்வரையும் தனக்கு தெரியும் என்றும், அவர்கள் அனைவரும் தங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றும், 25-04-2021ந் தேதி திருக்களூரில் உள்ள தனது உறவினர் வீட்டிற்கு தான் சென்றுவிட்டு காலை சுமார் 11.00 மணியளவில் சிவபெருமான்பாளையம் வருவதற்காக திருக்களூர் ஏரிக்கரை வழியாக டூவீலரில் நான் மட்டும் வந்தேன் என்றும், அந்த ஏரிக்கரையில் ஒரு ஆலமரம் உள்ளது என்றும், பெரிய 1வது எதிரி சரத்குமார், 2வது எதிரி சரவணன் ஆகியோர் தனது மாமா அய்யப்பனை மேற்படி ஆலமரம் அடியில் வைத்து அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அதன்பிறகு டூவீலரில் அவரை ஏற்றிக்கொண்டு தங்களது ஊர் நோக்கி சென்றார்கள் என்றும், அவர் சென்ற டூவீலர் Q. PY 05 H 1570 தான் தனது வண்டியில் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றும், சரவணன் மற்றும் சரத்குமார் அவரது உறவினர்கள், குமாரவேல் மற்றும் அவரது மனைவி ஜானகி அய்யப்பனை அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், அதன்பிறகு அவர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அவர் அங்கு இறந்துவிட்டார் என்றும், மறுநாள் 26.04.2021 தேதி காலையில் தானும் வழுதலூர் பக்கிரிபாளையம் கிராமத்தை சேர்ந்த ராஜ்குமார் என்பவரும், ஊர் பிள்ளையார் கோவிலில் நின்று கொண்டிருந்தோம் என்றும், விக்கிரவாண்டி போலீசார் அங்கு வந்து தங்கள் இடத்தை சம்பவ பார்வையிட்டார்கள் என்றும், நாங்கள் அருகில் சென்று காலை 6.00 மணியளவில் பார்த்தோம் என்றும், தங்களை சாட்சியாக இருக்குமாறு சொன்னார்கள் என்றும், நாங்கள் கையொப்பம் போட்டோம் என்றும், தன்னிடம்

காட்டப்படும் பார்வை உள்ள 2 வது சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும், முதல் கையொப்பம் ராஜ்குமார் என்பவருடையது என்றும், போலீசார் பார்வை எழுதிய பிறகே தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அந்த பார்வை மகசர் அசா.ஆ.2. இரத்தம் படிந்த சிமெண்ட் காரை, இரத்தம் படியாத சிமெண்ட் காரை முனியம்மாள் வீட்டு எதிரில் சிமெண்ட் ரோட்டில் எடுத்தார்கள் என்றும், அதன்பிறகு தங்கள் ஊர் கோவில் அருகிலும் இரத்தம் படிந்த மண், மற்றும் இரத்தம் படியாத மண் ஆகியவற்றையும் எடுத்தார்கள் என்றும், அதன்பிறகு தங்கள் ஊர் வாட்டர் டேங்க் தூணில் இரத்தம் படிந்திருந்தது என்றும், அதையும் உடைத்து இரத்தம் படிந்த மற்றும் இரத்தம் படியாத வாட்டர் டேங்க் தூண் பகுதியை உடைத்து எடுத்து கைப்பற்றினார்கள் என்றும், போலீசார் அவ்வாறு கைப்பற்றியதற்கு தனித்தனியாக கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும், ராஜ்குமாரும், சாட்சி கையொப்பம் போட்டோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் 3 கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள 2 வது கையொப்பங்கள் தன்னுடையது என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர்கள் முறையே அசா.ஆ.3 முதல் 5 வரை என்றும், தன்னிடம் காட்டப்படும் சான்று பொருட்கள் தான் அன்று கைப்பற்றப்பட்டவை என்றும், இரத்தம் படிந்த சிமெண்ட் காரை, இரத்தம் படியாத சிமெண்ட் காரை முறையே அ.சா.பொ.4, 5 ஆகும் என்றும், இரத்தம் படிந்த மண், மற்றும் இரத்தம் படியாத மண் முறையே அ.சா.பொ.6, 7 ஆகும் என்றும், இரத்தம் படிந்த மற்றும் இரத்தம் படியாத வாட்டர் டேங்க் தூண் பகுதிகள் முறையே அ.சா.பொ.8, 9 என்றும், பின்னர் சம்பவம் குறித்து போலீசார் தங்களை விசாரித்தார்கள் என்றும், தான் நடந்ததை சொன்னேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**D) அ.சா.4-ன் சாட்சியம்:-**

அசா.4.திரு.ஜெயகணேஷ் தனது சாட்சியத்தில், அ.சா.1 நதியா தனது தங்கை என்றும், இவ்வழக்கில் இறந்துபோன ஐயப்பன் தனது தங்கையின் கணவர் என்றும், சுமார் 12 வருடத்திற்கு முன்பு சிவபெருமான்பாளையத்தை சேர்ந்த ஐயப்பன் என்பவருக்கு திருமணம் செய்து வைத்தோம் என்றும், 2 வது எதிரி சரவணனும், அவரது மனைவியும், தனது தங்கையின் நடத்தையை பற்றி தவறாக பேசியதால் அது சம்பந்தமாக சண்டை நடந்தது என்றும், அதனை தொடர்ந்து தனது தங்கைக்கும், அவரது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு, தனது தங்கை கோவித்து கொண்டு தங்கள் வீட்டிற்கு வந்திருந்தார் என்றும், தனது மாமா சரவணனின் மனைவியிடம் தகராறு செய்து தாக்கிவிட்டார் என்றும், அதனால் அவர்கள் மருத்துவமனைக்கு சென்றுள்ளார்கள் என்றும், விவரம் தெரிந்து தான் தனது தங்கையை அழைத்து வந்து அவரது கணவர் வீட்டில் காலையில் விட்டேன் என்றும், தான் வேலைக்கு போய்விட்டேன் என்றும், 25.04.2021ம் தேதி சம்பவம் நடந்துள்ளது என்றும், தனக்கு மதியம் 1 மணியளவில் தனது தங்கை தனக்கு போன் செய்து ஐயப்பனை அடிக்கிறார்கள் என்று சொன்னார் என்றும், தனக்கு வேலை இருந்ததால் தான் வேலைக்கு போய்விட்டேன் என்றும், பின்னர் சாயந்திரம் 04.30 மணிக்குதான் சிவபெருமான்பாளையம் வந்தேன் என்றும், எதிரிகள் சரவணன், சரத்குமார், சரவணனின் மனைவி விஜயகுமாரி, குமாரவேலு ஆகியோர் தனது மாமா ஐயப்பனை அடித்ததாக சொன்னார்கள் என்றும், ஆம்புலன்சில் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று இருப்பதாகவும் சொன்னார்கள் என்றும், தான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், அங்கு சிகிச்சையில் இருந்தவரை பார்க்க அனுமதிக்கவில்லை

என்றும், அன்று இரவே ஐயப்பன் இறந்துவிட்டார் என்றும், இது சம்பந்தமாக தன்னை போலீசார் விசாரித்தனர் என்றும்

சாட்சியம் அளித்துள்ளார்.

**E )அ.சா.5 -ன் சாட்சியம் :-**

அ.சா. 5 திரு.பிரகாஷ் என்பவர் தனது சாட்சியத்தில் நான் சிவபெருமான்பாளையத்தில் வசித்து வருகிறேன் என்றும், தான் கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பனை எனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கில் அ.சா.1 நதியா, அ.சா.2 கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை எனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும் என்றும், அய்யப்பன் இறந்து 1 அல்லது 11/2 வருடம் இருக்கும் என்றும், அவர் இறப்பதற்கு முன்பு யார் யாருக்கிடையில் சண்டை நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் அப்போது வேலைக்கு போயிருந்தேன். எனக்கு சம்பவம் குறித்து மறுநாள் தான் அவர் இறந்துவிட்டார் என்று தெரியும் என்றும், என்னுடன் வேலை செய்தவர்கள் 7 பேர் காவல்நிலையத்திற்கு சென்று வழக்கு சம்மந்தமாக கையெழுத்து போட வேண்டும் என்று சொன்னார்கள். காவல்நிலையத்தில் ஒவ்வொருவரும் கையெழுத்து செய்தோம் என்றும், அவர்கள் விசாரணை செய்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**F)அ.சா.6-ன் சாட்சியம்:-**

அ.சா.6 திரு.இளையராஜா தனது சாட்சியத்தில் தான் திருபுவனையில் வசித்து வருகிறேன் என்றும், தான் விவசாயம் செய்து வருகிறேன் என்றும், இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பனை தனக்குத் தெரியும் என்றும், இந்த வழக்கில் அசா.1 நதியா, அசா.2 கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை தனக்குத் தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் அனைவரையும் தனக்குத் தெரியும் என்றும், அய்யப்பன் 2021 ஆண்டு ஏப்ரல் மாதம் 20 தேதிக்கு பின்பு இறந்துவிட்டார் என்றும், இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பன் என்பவருக்கும் அவரது பங்காளி 2ம் எதிரி சரவணன் என்பவருக்கும் சண்டை அந்த சண்டையில் அய்யப்பன் மனைவியை அடித்துவிட்டார் என்றும், இதனால் அய்யப்பனுக்கும், அவரது மனைவி நதியாவிற்கும், சண்டை வந்தது என்றும், அப்போது சரவணன் அவரது மனைவியை அடித்துவிட்டது சம்மந்தமாக விக்கிரவாண்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது தெரிந்து அய்யப்பன் பயந்து வீட்டை விட்டு ஓடிவிட்டார் என்றும், 1வது எதிரி சரத்குமார் தன் அம்மாவை அடித்தவனை எப்போது ஆனாலும் வெட்டிவிடுவேன் என்று அய்யப்பன் வீட்டிற்கு சென்று மிரட்டியதால் அய்யப்பனின் மனைவி நதியா பயந்து கொண்டு அவரது தாய் வீடு சென்றுவிட்டார் என்றும், அதன்பிறகு 2, 3 நாட்கள் கழித்து அய்யப்பன் திருக்கனூர் ஏரிக்கரையில் இருக்கும் விபரம் தெரியவந்து 1, 2 எதிரிகள் திருக்கனூர் சென்று மோட்டார் சைக்கிளில் அய்யப்பனை உட்கார வைத்து ஊருக்கு அழைத்து வந்தனர் என்றும், அப்போது முதலில் அவர்கள் ஊர் எல்லையிலும் பிறகு இறுதியாக தண்ணி டேங்க் அழைத்துவந்து கட்டிப்போட்டு அவரை அடித்தார்கள் என்றும், அவ்வாறு அடித்ததாக இறந்தவரின் அக்கா பெயர் பிரியா என்பவர் தொலைபேசி மூலம் தனக்கு தகவல் கொடுத்து கொள்வார் என்றும், அவர் தகவல் கொடுத்து தான்

சொன்ன தகவலை தன்னிடம் சொன்னார் என்றும், அதன் பிறகு தான் போகும்போது அய்யப்பன் அன்று சுமார் 3 மணிக்குதான் அங்கு சென்றேன் என்றும், ஜட்டியோடு உடல் முழுவதும் ரத்தத்துடன் விழுந்துகிடந்தார் என்றும், அப்போது அய்யப்பனின் தம்பி கன்னியப்பன் என்பவர் அங்கு இருந்தார் அவரை காப்பாற்ற மாட்டீர்களா என்று தான் கேட்டேன் என்றும், அதற்கு அவர் தன்னை விடவில்லை என்றும், எதிரிகள் தன்னையும் அடிக்க வருகிறார்கள் என்று சொன்னார் என்றும், அதன் பிறகு தான் அய்யப்பனை தூக்கும்போது எதிரிகள் அப்படி விடமுடியாது என்றும், தன் அம்மா மருத்துவமனையில் சாக கிடக்கிறார் என்றும், எனவே பத்திரத்தில் கையொப்பம் போட்டுவிட்டு அவரை தூக்குங்கள் என்று 1ம் எதிரி சரத் என்னிடம் சொன்னார் என்றும், அப்போது தான் பரவாயில்லை என்றும், தானே சிகிச்சை முடிந்து அவரை காவல்நிலையத்தில் ஒப்படைக்கிறேன் என்று சொன்னபோது 4ம் எதிரி உனது அம்மாவிற்கு இப்படி நடந்தால் சும்மா இருப்பாயா என்று கூறி மணலை அள்ளி அவரது தலையில் காயம்பட்டு ரத்தம் வந்த இடத்தில் கொட்டினார் என்றும், அதன் பிறகு காவல்துறையினர் அதையெல்லாம் செய்யக்கூடாது என்று கூறி தடுத்தார்கள் என்றும், அதன் பிறகு 108 ஆம்புலன்ஸை வரவழைத்து அய்யப்பனை தாங்கள் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்து அவர் இரவு 1.30 மணிக்கு மேல் இறந்துவிட்டதாக தான் வீட்டில் இருந்தபோது தனக்கு தகவல் வந்தது என்றும், இது சம்மந்தமாக காவல்துறையினர் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**G)அ.சா.7-ன் சாட்சியம்:-**

அ.சா.7 முத்துகிருஷ்ணன் தனது சாட்சியத்தில், பக்கிரிபாளையத்தில் வசித்து வருகிறேன் என்றும், இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பனை தனக்குத் தெரியும் என்றும், இந்த வழக்கில் அ.சா.1 நதியா, அ.சா.2 கோபாலகிருஷ்ணன், அ.சா.6 இளையராஜா ஆகியோர்களை தனக்குத் தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் அனைவரையும் தனக்குத் தெரியும் என்றும், அய்யப்பன் கடந்த 25.04.2021 அன்று எதிரிகள் அடித்ததில் அன்று மருத்துவமனையில் சேர்த்து அன்று இரவே இறந்துவிட்டார் என்றும், அய்யப்பன் என்பவர் தனக்கு மாமா ஆவார் என்றும், 22.04.2021 அன்றே எதிரிகளுக்கும் தனது மாமாவிற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு, தனது மாமா சரவணன் மனைவியை அடித்துவிட்டார் என்றும், அதற்கு பிறகு அய்யப்பனுக்கும் அவரது மனைவிக்கும் பிரச்சனை ஏற்பட்டு, அவரது மனைவி பண்டகசோழநல்லூர்க்கு சென்றுவிட்டார் என்றும், அதன் பிறகு தனது மாமா அய்யப்பனும் ஊரில் இல்லை என்றும், தாங்களும் விஷயம் தெரிந்து தனது மாமாவை தேட ஆரம்பித்தோம் என்றும், அவர் எங்கே உள்ளார் என்று தனக்கு தெரியவில்லை என்றும், அடிபட்டவர்களும் காவல்துறையில் புகார் கொடுத்ததாக சொன்னார்கள் என்றும், திடீரென ஞாயிற்றுக்கிழமை மதியம் கோபாலகிருஷ்ணன் தனக்கு போன் செய்து திருக்கனூர் ஏரிக்கரையில் மாமாவை எதிரிகள் பிடித்துக் கொண்டு வந்து சொந்த ஊரில் வைத்து பயங்கரமாக அடித்ததாகவும், தடுக்க போனதற்கு தன்னையும் அடிக்க வந்ததாகவும் சொன்னார் என்றும், தான் இதை கேள்விப்பட்டவுடன் வண்டியை எடுத்துக் கொண்டு சிவபெருமான்பாளையத்திற்கு சென்றேன் என்றும், சென்ற போது தன் மாமா சம்பவ இடத்தில் ரத்த வெள்ளத்தில் ஜட்டியோடு

படுத்திருந்தார் என்றும், தலை முழுவதும் பலத்த ரத்தக்காயங்கள் இருந்தது என்றும், அதை பார்த்தவுடன் தான் எதிரிகளிடம் தனது மாமா அய்யப்பன் செய்தது தவறு தான் அதற்காக அவரை அடித்துவிட்டீர்கள் என்றும், ஆனால் அவரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து செல்லவிடுங்கள் என்றும் முடிந்தவுடன் காவல்துறையிடம் ஒப்படைக்கிறோம் என்று கேட்டதற்கு அவர்கள் தவறான வார்த்தை சொல்லி ஒரு மணி நேரமாக அவரை அனுப்பவேயில்லை என்றும், அப்போது 4ம் எதிரி அவரது தலையில் மண்ணை வாரி வைத்துவிட்டார் என்றும், இந்த சம்பவத்திற்கு பிறகு அய்யப்பனின் மனைவி நதியாவும் அங்கு வந்து தனது கணவன் செய்தது தவறு தான் என்றும், அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல அனுமதியுங்கள் என்று கேட்டதற்கு அதற்கும் அவர்கள் அனுமதிக்கவில்லை என்றும், அதன் பிறகு விக்கிரவாண்டி காவல்நிலையத்தில் இருந்து காவலர்கள் வந்துவிட்டனர். ஆம்புலன்ஸும் உடனடியாக வந்துவிட்டது என்றும், காவலர்கள் 5 அல்லது 10 நிமிடங்கள் வாக்குவாதம் செய்தபிறகு தான் அய்யப்பனை ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள் என்றும், அவரை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதித்தார்கள் என்றும், அங்கேயே காவல்துறையினர் வந்து என்ன நடந்தது என்று தங்களிடம் விசாரித்தார்கள் என்றும், அவர்களே விசாரித்து புகாரை எடுத்துக்கொண்டார்கள் என்றும், அதன் பிறகு அவரை சிகிச்சைக்கு அனுமதித்து அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளித்தனர் என்றும், அன்று இரவு 1 மணிக்கு அய்யப்பன் இறந்துவிட்டார் என்றும், இது சம்மந்தமாக காவல்துறையினர் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்

**H ) அ.சா.8-ன் சாட்சியம் :-**

அ.சா.8 செல்வகுமார் தனது சாட்சியத்தில், தான் தற்போது பிளம்பர் வேலை செய்து வருகிறேன் என்றும், 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 7 மணியளவில் திருக்கனூர் ஏரிக்கரைக்கு தானும், தனது நண்பர் கார்த்திகேயன் என்பவரும் சென்றோம் என்றும், அப்போது விக்கிரவாண்டி காவல் துறையினர் அங்கு சிவபெருமான் பாளையத்தை சேர்ந்த ஐய்யப்பன் என்பவரை கொலை செய்த வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்த்து விசாரணை செய்து வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும், மேற்படி கார்த்திகேயன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.6 என்றும், இது சம்மந்தமாக தன்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்

**I) அ.சா.9 -ன் சாட்சியம்:-**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது தச்சு தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பன் என்பவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் அவரை எனக்கு தெரியும் என்றும், எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும் என்றும், என்னிடம் காண்பிக்கப்படும் 3 ஒப்புதல் வாக்குமூலங்கள், 3 கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது அல்ல என்றும்,**

இந்த வழக்கில் ஐய்யப்பன் எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றும், போலீசார் எங்கள் முன்னிலையில் எதிரிகள் யாரையும் விசாரித்தார்களா என்றால் இல்லை என்றும், எங்கள் முன்னிலையில் எந்த பொருட்களையும் எடுத்து அவர்கள் ஆஜர் செய்யவில்லை என்றும், இது சம்மந்தமாக போலீசார் என்னை பார்த்தார்களா என்றால் நான் அப்போது ஊரிலேயே இல்லை. என்னை விசாரிக்கவில்லை என்றும், சம்பவத்திற்கு பிறகு 14 நாட்கள் கழித்து ஊருக்கு வந்தேன். ஆனால் அவர் எவ்வாறு இறந்தார் எனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**J) அ.சா.10-ன் சாட்சியம் :-**

அ.சா.10 கனகா தனது சாட்சியத்தில், தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது எங்கள் ஊர் ஏரிக்கரையிலுள்ள சிறிய மாரியம்மன் கோயிலில் குறி சொல்லும் தொழில் செய்து வருகிறேன் என்றும், அந்த கோயிலுக்கு நிறைய பேர் வருவார்கள் செல்வார்கள். அனைவரையும் என்னால் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியாது என்றும், இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட ஆஜர் ஆண் எதிரி (2ம் எதிரி) அங்கு பார்த்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**K ) அ.சா.11-ன் சாட்சியம்:-**

தான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். தான் தற்போது கொத்தனார்

வேலை செய்து வருகிறேன் என்றும், தன் அப்பாவை தியாகராசு என்று அழைப்பார்கள். இந்த வழக்கில் இறந்துபோன ஐய்யப்பனை எனக்கு தெரியும். அவரது மனைவி அ.சா.ஆ.1 நதியாவை எனக்கு தெரியும் என்றும், எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். சக்கரபாணி மகன் பெரியசாமியை எனக்கு தெரியும். அனைவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும், இந்த வழக்கில் ஐய்யப்பன் இறந்துவிட்ட அன்று அந்த பிரேதத்தை வைத்து விசாரித்து பிரேதத்தை பெற்றுக்கொள்ள அன்று காவல் நிலையத்தில் வைத்து விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னிடம் ஒரு கையொப்பம் வாங்கினார்கள் என்றும், வேறு ஒன்றும் இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கின் எதிரிகளை விசாரித்த விவரமும், அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த விவரமும், எனக்கு தெரியாது என்றும், என்னை வேறு எங்கும் அழைத்து செல்லவில்லை. என் முன்னிலையில் எந்த பொருட்களும் கைப்பற்றப்படவும் இல்லை என்றும், என்னிடம் காட்டப்படும் 1,2,3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையது தான். அது முறையே அ.சா.ஆ. 7, 8, 9 ஆகும் என்றும், கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள கையெழுத்துக்களில் 2ம் கையெழுத்து என்னுடையது தான். அவைகள் முறையே அ.சா.ஆ. 10, 11, 12, ஆகும் என்றும் இது சம்மந்தமாக என்னை போலீசார் அதன் பிறகு விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>L ) அ.சா.12-ன் சாட்சியம்:-</u>**

**அசா. 12. மருத்துவர் மதுவர்தனா தனது சாட்சியத்தில், தான் தற்போது அரசு விழுப்புரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில்**

முதுநிலை உதவி பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன் என்றும், தான் அதே பணியிலிருந்த போது கடந்த 26/04/2021 அன்று விக்கிரவாண்டி காவல் நிலைய கு.எண்.221/2021 என்ற குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்த நபர் ஐய்யப்பன், 44 வயது த/பெ குப்பன், என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்குமாறு விக்கிரவாண்டி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் முதல் நிலை காவலர் எண்.2606 திரு. வெங்கடேசன் என்பவர் மூலம் பெற்றுக்கொண்டு, அன்றைய தினமே பிற்பகல் 12.30 மணிக்கு மேற்படி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனையை தொடங்கினேன் என்றும், மேற்படி இறந்த நபரின் உடலில் காணப்பட்ட அங்க மச்ச அடையாளங்கள் சரிபார்க்கப்பட்டது என்றும், உடலில் மீது பிணவிறைப்பு தன்மை, உடலின் மேல் பகுதியில் மிகுதியாக காணப்பட்டது என்றும், கண்கள், மற்றும் வாய் மூடிய நிலையிலும், விரல் நகங்கள் நீல நிறத்திலும் காணப்பட்டது என்றும்,

**<u>உடலின் மீது காணப்பட்ட காயங்கள் பின்வருமாறு</u>:**

சுமார் 3 செ.மீ நீளம், 2 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது இடது பக்க தலையில் இடது காதின் பின்புறத்தில் இரண்டு தையல்களுடன் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது என்றும்.

சுமார் 4 செ.மீ நீளம், 3 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது வலது கையின் கட்டை விரலில் அடிப்பகுதியில் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது என்றும்,

சுமார் 2 செ.மீ நீளம், 2 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது மேல் உதட்டின் மேல் பகுதியில் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது என்றும்,

சுமார் 4 செ.மீ நீளம், 2 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது இடது பக்க முகவாய் கட்டையில் 3 தையல்களுடன் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது என்றும்,

சுமார் 11 செ.மீ நீளம், 9 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழம் கொண்ட கன்றிய காயமானது வலது முழங்கையின் வெளிப்புறத்தில் சிவப்பு நிறத்தில் காணப்பட்டது என்றும், மேற்படி பரிசோதனையின் போது தலையில் முடி தோலில் சுமார் 16 செ.மீ நீளம், 12 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழம் கொண்ட கன்றிய காயமானது இடது பக்க தலையில் காணப்பட்டது என்றும், மண்டை ஓடு மூளை உறை ஆகியவை இயல்பான நிலையில் காணப்பட்டது என்றும், மூளையில் இடது புறத்தில் மற்றும் பக்க வாட்டில் மேற்புறத்தில் இரத்த கட்டுகள் காணப்பட்டது என்றும், மண்டை ஓட்டின் அடிப்பகுதி இயல்பான நிலையில் காணப்பட்டது என்றும்,

கழுத்தின் நாவடி மற்றும் குரல்வளையில் உள்ள எலும்புகள் அதனை சுற்றியுள்ள தசைகள் ஆகியவை இயல்பான நிலையில், மூச்சு குழாய் மற்றும் உணவு குழாய் இயல்பான நிலையிலும், அன்னிய பொருட்கள் எதுவும் இல்லாமலும் காணப்பட்டது

என்றும், மார்பில் குறுத்து எலும்புகள், மற்றும் விலா எலும்புகள், நுரையீரல்கள், இருதயம், மற்றும் அதனை சுற்றியுள்ள தமனிகள் ஆகியவை இயல்பான நிலையில் காணப்பட்டது என்றும்,

வயிற்றில் இரைப்பையில் சுமார் 100 மி.லி அளவிலான மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது என்றும், அதில் வாடை எதுவும் தென்படவில்லை என்றும், மற்ற உடல் உள்ளுறுப்புகள் அனைத்தும் இயல்பான நிலையிலும் வெட்டு தோற்றத்தில் இரத்தம் தோய்ந்த நிலையிலும், இடுப்பு எலும்புகள் மற்றும் தண்டுவடம் ஆகியவை இயல்பான நிலையிலும் காணப்பட்டது என்றும்,

பிரேத பரிசோதனையானது பிற்பகல் 1.30 மணிக்கு முடிக்கப்பட்டது என்றும், உடலின் மீது காணப்பட்ட காயங்கள் அனைத்தும், இறப்பிற்கு முன்பாக ஏற்பட்ட காயங்கள் என்றும், பரிசோதனையின் போது சேகரம் செய்யப்பட்ட இரத்தம் மற்றும் உடல் உள்ளுறுப்புகள் இரசாயன பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது என்றும், இரத்தம் வகை அறியும் பொருட்டு இரத்தம் தோய்ந்த பஞ்சானது ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும், அந்த ஆய்வகத்தின் அறிக்கை 10/06/2021 அன்று பெறப்பட்டது என்றும், அதில் மேற்படி இறந்த நபரின் இரத்தத்திலும், உடல் உள்ளுறுப்புகளிலும், சாராயமோ, வேறு எந்த நச்சு பொருட்களோ தென்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மருத்துவர் கருத்துரை, மேற்படி பிரேத பரிசோதனை மற்றும் ஆய்வக அறிக்கை, ஆகியவற்றின் அடிப்படையில், மேற்படி இறந்த நபர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவினால் இறந்திருக்கக்கூடும்

என்று எனது இறுதி கருத்துரை வழங்கினேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஆயுதங்கள் (எண்ணிக்கை 4) அவைகளால் தாக்கினால் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயங்களும் இறப்பும் ஏற்பட வாய்ப்புள்ளதா? என்றால் உள்ளது என்றும், தன்னிடம் காட்டப்படும் தான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அசா.ஆ.13 என்றும், தன்னுடைய இறுதி கருத்துரை அசா.ஆ.14 என்றும், தான் பெற்ற இரசாயன பரிசோதனை அறிக்கை VPM/TOX.H/612/2021 நாள். 31.05.2021 பெறப்பட்டது என்றும், அது அ.சா.ஆ.15 என்றும், நான் பெற்ற குருதியியல் அறிக்கை VPM/BIOL/198/2021 dt.31/05/2021, அ.சா.ஆ.16 என்றும், இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**M ) அ.சா.13 ன் சாட்சியம் :-**

அசா.13 திரு.பி.வெங்கடேசன் தனது சாட்சியத்தில், தான் தற்போது விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 26/04/2021-ந் தேதி விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக தான் பணியிலிருந்த போது, சிவபெருமான் பாளையத்தை சேர்ந்த குப்பன் மகன் ஐயப்பன் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் வட்ட ஆய்வாளர் அவரிடம் இறந்துபோன ஐயப்பனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய கடவுச்சீட்டு, வேண்டுகோள் கடிதம் பெற்று, விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சென்று வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன்

என்றும், பின்பு பிரேத பரிசோதனையின் போது உடன் இருந்து பிரேதத்தில் இருந்து சேகரம் செய்யப்பட்ட உள்ளுறுப்புகளை விழுப்புரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன் என்றும், பிறகு ஆய்வாளரிடம் இவற்றை ஒப்படைத்ததை குறித்து தகவல் தெரிவித்தேன் என்றும், தன்னை இது சம்மந்தமாக ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**N ) அ.சா.14 ன் சாட்சியம் :-**

தான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். தான் சென்னை அயனாவரம் காவல் நிலையத்தில் சட்ட ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் என்றும், கடந்த 25/04/2021-ந் தேதி விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது, விக்கிரவாண்டி தாலுக்கா சிவபெருமான் பாளையத்தை சேர்ந்த ஐயப்பன் மனைவி நதியா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்துக்கொண்ட எழுத்துமூலமான புகாரை பெற்று, நிலைய கு.எண்.221/2021 இதச பிரிவுகள் 294(பி), 364, 323, 324, மற்றும் 307-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அசா.ஆ. 17 ஆகும் என்றும், முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதித்துறை நடுவர் விக்கிரவாண்டி அவர்களுக்கு முறையாக அனுப்பி வைத்தேன் என்றும், நகல்களை முறையாக வரிசை விவரம் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பினேன் என்றும், வழக்கு கோப்பினை விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன் என்றும், இது சம்மந்தமாக ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்

**O) அ.சா.15-ன் சாட்சியம்:-**

அ.சா.15 திரு.எஸ்.ஆறுமுகம் தனது சாட்சியத்தில், தான் தற்போது காட்டுமன்னார்கோவில் காவல் நிலையத்தில் காவல் வட்ட ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் என்றும், கடந்த 2021-ம் வருடம் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது, சிவபெருமான் பாளையத்தைச் சேர்ந்த ஐயப்பன் மனைவி நதியா என்பவர் கடந்த 25.04.2021-ம் தேதி இரவு 8.30-மணியளவில் நிலையம் ஆஜராகி கொடுத்துக்கொண்ட எழுத்து பூர்வமான புகாரை உதவி ஆய்வாளர் திரு.பரணிதரன் அவர்கள் பெற்று, நிலைய குற்ற எண்.221/2021 இதச பிரிவுகள் 294(பி), 364, 323, 324, 307-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தன் பார்வைக்கு வைத்ததை தான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடமான சிவபெருமான் பாளையம் பிள்ளையார் கோவில் அருகில் சாட்சிகள் நதியா, கோபாலகிருஷ்ணன், மற்றும் பிரகாஷ், ஆகிய மூவரும் அடையாளம் காட்டிய சம்பவ இடத்தை இரவு நேரம் என்பதால் தான் குறிப்பு எடுத்துக்கொண்டு மேற்கண்ட சாட்சிகள் மூவரையும் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், ஐயப்பனை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று காயம்பட்டவர் சிகிச்சையில் உள்ளாரா? என்பதை விசாரணை செய்ய அவர் மருத்துவமனை பதிவேட்டின் படி அவசர சிகிச்சை பிரிவில் அன்று மாலை 05.00 மணிக்கு சேர்ந்துள்ளார் என்றும், தெரிந்து அவருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டைப் பெற்றேன் என்றும், அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.18 என்றும், அன்று

இரவு சுமார் 01.00 மணியளவில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற மருத்துவ தகவலில் காயம்பட்ட ஐயப்பன் என்பவர் இறந்துவிட்டதாக தகவல் பெறப்பட்டது என்றும், மேற்படி தகவலின் படி இறந்துபோன ஐயப்பனின் மனைவி காவல் நிலையம் வந்து தன் கணவர் இறந்தது உண்மை என தகவல் தெரிவித்தார் என்றும், வழக்கின் சட்டப்பிரிவினை இ.த.ச பிரிவுகள் 294(பி), 364, 323, 324, 307-ல் இருந்து 294(பி), 364, 302 இ.த.ச படி பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்தேன் என்றும், அந்த பிரிவு மாற்ற அறிக்கை அ.சா.ஆ.19 என்றும், அதன் பிறகு 26.04.2021-ம் தேதி காலை 06.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான சிவபெருமான் பாளையம் பிள்ளையார் கோவில் தெரு முனியம்மாள் என்பவரின் புதியதாக கட்டிக்கொண்டிருக்கும் வீட்டின் அருகில் உள்ள சம்பவ இடத்தை சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் ராஜா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன் என்றும், சாட்சிகளிடம் அதில் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.20 என்றும், அதன் பிறகு வழக்கின் 2-வது சம்பவ இடமான திருக்கனூர் ஏரிக்கரை அருகில் உள்ள மாரியம்மன் கோவில் அருகில் காலை 07.00 மணிக்கு சென்று சாட்சிகள் செந்தில்குமார், கார்த்திகேயன், ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன் என்றும், பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், தன்னிடம் காட்டப்படுவது தான் அந்த மாதிரி வரைபடம் என்றும், அது அ.சா.ஆ.21 என்றும், மேற்படி சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் கார்த்திகேயன் ஆகியோரிடம் விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அதன் பிறகு காலை சுமார் 07.45 மணிக்கு

சிவபெருமான்பாளையம் பிள்ளையார் கோவில் தெருவில் முனியம்மாள் புதிய வீட்டின் அருகில் சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் ராஜா முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்த 1) இரத்த கறை படிந்த சிமெண்ட் காரை, 2) சாதாரண சிமெண்ட் காரை, 3) சுமார் 6 இன்ச் அளவுள்ள இரத்த கறை படிந்தது ஆகியவைகளை மகசரில் கைப்பற்றினேன் என்றும், கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சி 6 இன்ச் அளவுள்ள கட்டையை சரியாக அடையாளம் காட்டினார். அது சா.பொ.10 என்றும், அதன் பிறகு அதே தெருவில் பழனி என்பவரின் வீட்டின் முன்னும் பின்னும் 1) இரத்தக் கறை படிந்த மண் சிறிதளவு, 2) சாதாரண மண் சிறிதளவு, 3) இரத்தக் கறை படிந்த செங்கல் ஒன்று, ஆகியவற்றை காலை சுமார் 08.15-மணிக்கு மகசர் தயார் செய்தேன் என்றும், மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த செங்கல்லை (அயிட்டம் 3) பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சி கூறினார் என்றும், சாட்சி அந்த செங்கல்லை சரியாக அடையாளம் காட்டினார் என்றும், அதன் பிறகு சுமார் 08.40 மணிக்கு அதே தெருவில் உள்ள சம்பவ இடத்தில் உள்ள சிமெண்ட் தூணில் இருந்த இரத்தக் கறையை உடைத்து சிறிதளவு 1) சிமெண்ட் காரை ஒன்று, 2) சாதாரண சிமெண்ட் காரை சிறிதளவு எடுக்கப்பட்டு, அதை மகசரில் கைப்பற்றினேன். (அந்த மகசர் அ.சா.ஆ. 5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது) என்றும், சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் ராஜா ஆகியோர்களிடம் விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அன்று காலை சுமார் 10.00-மணியளவில்

முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த ஐயப்பனின் பிரேதத்தை சாட்சிகள் அடையாளம் காட்ட பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன் என்றும், பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன் என்றும், அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.22 என்றும், அதன் பிறகு விக்கிரவாண்டி காவல் நிலைய முதல் நிலை காவலர் வெங்கடேசன், ஐயப்பனின் பிரேதத்தை ஒப்புவித்தோம் என்றும், பிரேதத்தை உடற்கூறாய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியும், அது தொடர்பாக மற்ற நடவடிக்கைகளைச் செய்யக்கோரி வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன் என்றும், வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்து எதிரிகள் 4 பேரும் ஐயப்பனை முன்விரோதம் கொண்டு தாக்கி கொலை செய்தது உண்மை என தெரியவந்தது என்றும், அன்று மதியம் 01.00 மணியளவில் பனையபுரம் சந்திப்பு அருகே எதிரிகள் இருப்பதாக இரகசிய புலனாளி கொடுத்த தகவலின் பேரில், அங்கு சென்று எதிரிகள் 1) சரத்குமார், 2) சரவணன், 3) குமரவேல், 4) ஜானகி, ஆகியோர்களை பிடித்து விசாரிக்க அவர்கள் 4 பேரும் தங்களது குற்றத்தை ஒப்புக்கொண்டதால், கைதுக்கான காரணத்தை எடுத்துக்கூறி மதியம் 01.00- மணிக்கு கைது செய்தும், கைது குறித்து அவர்களது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தேன் என்றும், அதன் பிறகு அவர்களில் 1, 2, 3 எதிரிகள் சாட்சிகள் பெரியசாமி மற்றும் பச்சையப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் தன்னிச்சையாக எந்த வற்புறுத்தலும் இன்றி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக்கொண்டார்கள் என்றும், அதில் 1, 2, 3 எதிரிகள் சரத்குமார், சரவணன் மற்றும் குமரவேல் கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன் என்றும், பதிவு செய்து அதில்

சாட்சிகள், எதிரிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் தன்னை அழைத்துச்சென்றால் நாங்கள் ஐயப்பனை அடித்த இடங்களையும், பயன்படுத்திய ஆயுதங்களையும் எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதை பதிவு செய்து, அதில் சாட்சிகள், எதிரிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அவைகளில் 1-ம் எதிரி கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ-23 என்றும், 2-ம் எதிரி கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.-24 என்றும், 3- ம் எதிரி கொடுத்துக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.-25 என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரிகள் அழைத்துச் சென்ற இடத்திற்கு சாட்சிகளுடன் சென்று சம்பவ இடத்தை அடையாளம் காட்டியதில், 1-ம் எதிரி சரத்குமார் அவர் 05.30- மணியளவில் சிவபெருமான்பாளையம் தன் மாட்டுக்கொட்டகை அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1) PY-05- H- 1570 என்ற பதிவெண் கொண்ட Honda X Blade சாம்பல் நிற இருசக்கர வாகனம் ஒன்று 2) சுமார் 2 1/2 அடி நீளமுள்ள மரத்தால் ஆன இரத்தக்கறை படிந்த கட்டில் கால் ஒன்று, இவைகளை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அவைகளை மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.26 என்றும், அந்த மோட்டார் சைக்கிளை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் அந்த மோட்டார் சைக்கிளின் புகைப்படங்கள் (எண்ணிக்கை 2) அ.சா.ஆ. 27 என்றும், அந்த கட்டிலின் காலைப்பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், (அயிட்டடம் எண்.2) சாட்சி சரியாக அடையாளம் காட்டினார் என்றும், அந்த கட்டிலின்

கால் சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் பிறகு மாலை 06.00- மணிக்கு 2- ம் எதிரி சரவணன் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த இரத்தக் கறை படிந்த இரும்பு ஸ்பேனர் ஒன்றை சாட்சிகள் பெரியசாமி, பச்சையப்பன், முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன் என்றும், சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ-28 என்றும், அந்த இரும்பு ஸ்பேனரைப்பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என சாட்சி கூறினார் என்றும், அதை சாட்சி சரியாக அடையாளம் காட்டினார் என்றும், அது சா.பொ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்பு 06.30- மணியளவில் 3- ம் எதிரி குமரவேல் அடையாளம் காட்டிய சிவபெருமான்பாளையம் வாட்டர் டேங்க் பின்புறம் உள்ள வாழைத்தோப்பில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 1 3/4 அடி நீளமுள்ள இரத்தக் கறை படிந்த ஒருபக்கம் எரிந்த நிலையில் ஒழுங்கற்ற கட்டை ஒன்றை மகசரில் கைப்பற்றினேன் என்றும், சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த மகசர் அ.சா.ஆ-29 என்றும், சாட்சி அந்த பொருளை சரியாக அடையாளம் காட்டினார் என்றும், அந்த கட்டை சா.பொ. 2 ஆக அ.சா. 1-ன் மூலமாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகளிடம் விசாரணை முடித்து தான் 4 எதிரிகளையும் காவல் நிலையம் அழைத்துச் சென்று, உச்சநீதிமன்ற கட்டளைகளை முறையாக பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பிறகு உடற்கூறாய்வு செய்த மருத்துவர் திரு. மதுவதனன் அவர்களை விசாரணை செய்து அறிக்கை பெற்று, அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகள் நதியா, கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகிய

மூவரையும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகள் இளையராஜா, துரை, ஜெயகணேஷ், சாட்சி கனகா, ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், விழுப்புரம் தடய அறிவியல் ஆய்வக வல்லுநர்கள் திருமதி. ஷர்மிளா மற்றும் ராஜா ஆகியோர்களை விசாரணை செய்து, பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன் என்றும், அந்த இரசாயன குருதியியல் அறிக்கை SER/ VPM/107/2021 Dt. 25.07.2022, SER/VPM/100/ 2021 Dt. 04.08.2022 அ.சா.ஆ 30 ஆகும் என்றும், டாக்டர் மங்களமுருகனை விசாரணை செய்து விபத்து பதிவேட்டை பெற்றேன் என்றும், (அது ஏற்கனவே என்னால் அ.சா.ஆ 18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.) அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அதன் பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. பரணிநாதன் மற்றும் 2-ம் நிலை காவலர் வெங்கடேசன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், எதிரிகளைப் பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சி கூறினார் என்றும், 1, 2, 4 எதிரிகளை சாட்சி சரியாக அடையாளம் காட்டினார் என்றும், 3-ம் எதிரி குமரவேல் அவர்களுக்கு 317 - குவிமுச படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிறகு கைப்பற்றிய வழக்குச்சொத்துகளை படிவம் - 95 க்கு மாற்றி அவைகளை முறையாக வழக்கு சொத்தினை படிவம் - 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், அந்த படிவம்-95 கள் (எண்ணிக்கை 6) முறையே அ.சா.ஆ. 31 முதல் 36 வரை ஆகும் என்றும், தன் விசாரணை முடித்து உதவி இயக்குநர், அரசு தரப்பு அவர்களின் ஒப்புதல் பெற்றேன் என்றும், அவர்களுடைய அறிவுரையின் படியும், தன் விசாரணையின் படியும், பிரிவுகள் இ.த.ச. 294(பி), 364, 323, 324, 307 மற்றும் 302-ல் இருந்து இ.த.ச.

341,294(பி), 364, 323, 324, 302, 120(பி), 352, உ/இ. 34, உ/இ. 109 படி பிரிவு மாற்ற அறிக்கை தயார் செய்தேன் என்றும், அந்த பிரிவு மாற்ற அறிக்கை அ.சா.ஆ.37 - என்றும், தன் விசாரணை முடித்து எதிரிகள் 1) சரத்குமார் த/பெ. சரவணன், 2) சரவணன் த/பெ. காத்தவராயன், 3) குமரவேல் த/பெ. கிருஷ்ணன் 4) ஜானகி க/பெ. குமரவேல் ஆகியோர்கள் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், சாட்சி பிரகாஷ் தன் விசாரணையில் எதிரிகள் ஐயப்பனை தாக்கியதை நேரடியாக பார்த்ததாகவும், மருத்துவமனைக்கு ஐயப்பனை அழைத்துச் சென்று சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்த விபரங்களை விசாரணையிலும், மறுவிசாரணையிலும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சிகள் பெரியசாமி, பச்சையப்பன் ஆகியோர்கள் எதிரிகளை கைது செய்யும் போது உடனிருந்து எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் கையொப்பம் செய்தது பற்றியும், வழக்கு சொத்துக்களை எதிரிகள் ஆஜர் செய்து கைப்பற்றியபோது மகசரில் சாட்சியாக கையொப்பம் இட்டது பற்றியும் கூறியுள்ளார் என்றால் சரிதான் என்றும், சாட்சி கனகா இவ்வழக்கில் இறந்துபோன ஐயப்பனை எதிரிகள் திருக்கனூரில் இருந்து இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்ததை பார்த்ததாக தன் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**8) குவி.மு.ச.313(1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட கேள்விகளுக்கு, எதிரிகள் அளித்த விளக்கத்தின் சுருக்கம் -**

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில், எதிரிகளுக்கு பாதகமாக

தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் கீழ் எதிரிகளிடம் விளக்கி வினவியபோது, எதிரிகள் சாட்சியங்களை பொய் என மறுத்தார்கள். மேலும் தங்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்கள் .

**9) இருதரப்பு வாய்மொழி சாட்சியம் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் இரு தரப்பு வாதுரைகளையும் ஆய்வு செய்ததில்,**

1) எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள். 120(பி)(1), 341, 294(b), 324, 352, 364(b), 302, 302 உ/இ.34 பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபித்துள்ளதா?

2) அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றால், எதிரிகள் மேற்சொன்ன குற்றச்சாட்டுக்கள் அனைத்திற்கும் தண்டனை பெறத்தக்கவர்களா?

என்பதே இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனைகளாகும்.

**11) பிரச்சனை எண்கள் 1 மற்றும் 2-க்கான பரிசீலனையும் தீர்வும்:-**

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் வாதம் கேட்கப்பட்டது. கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதம் கேட்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட

எழுத்துபூர்வமான வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கின் கோப்புக்கள் மற்றும் இரு தரப்பு சான்றாவணங்கள், அரசு தரப்பு சாட்சியங்கள், சான்று பொருட்கள் ஆகியவை கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டன. எதிரிகள் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற மற்றும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மற்றும் இதர மாண்புமிகு உயர் நீதிமன்றங்களின் முன் தீர்ப்புகள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டன.

**12) அரசு தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாரம்சங்கள் பின்வருமாறு:-**

இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், கொலையுண்ட அய்யப்பன் (44 வயது) மற்றும் 2வது எதிரி சரவணன் ஆகியோர் உறவினர்கள் (சித்தப்பா மகன்) என்றும், இவர்களது மனைவிகளிடையே ஏற்பட்ட தகராறில், கடந்த 22.04.2021 அன்று அய்யப்பன், சரவணனின் மனைவி விஜயகுமாரியைத் தாக்கிவிட்டுத் தலைமறைவானார் என்றும், தன் மனைவி தாக்கப்பட்டதால் ஆத்திரமடைந்த 2வது எதிரி சரவணன், அவரது மகன்கள் (1வது எதிரி சரத்குமார்) மற்றும் மைத்துனர் (3வது எதிரி குமரவேல்) ஆகியோருடன் இணைந்து அய்யப்பனைக் கொலை செய்ய மருத்துவமனையிலேயே சதித்திட்டம் தீட்டினர் என்றும், கடந்த 25.04.2021-ம் தேதி புதுச்சேரி, திருக்கனூர் ஏரிக்கரையில் தங்கியிருந்த அய்யப்பனை, 1 மற்றும் 2வது எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வலுக்கட்டாயமாக ஏற்றி சிவபெருமான்பாளையம் கிராமத்திற்குக் கடத்தி வந்தனர் என்றும், ஊருக்குக் கொண்டுவரப்பட்ட அய்யப்பனை 1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஒன்று சேர்ந்து ஆபாச வார்த்தைகளால் திட்டி கடுமையாகத் தாக்கினர் என்றும், 1வது

எதிரி மரக்கட்டிலின் காலால் அய்யப்பனின் தலையிலும் உடம்பிலும் அடித்தார் என்றும், 2 வது எதிரி இரும்பு ஸ்பேனரால் தாடை மற்றும் முகத்தில் தாக்கினார் என்றும், 3 & 4 வது எதிரிகள் தப்பியோட முயன்ற அய்யப்பனைத் தடுத்து நிறுத்தி தடி, கை மற்றும் கால்களால் சரமாரியாகத் தாக்கினர். மேலும், தடுக்க வந்த அய்யப்பனின் மனைவி நதியாவையும் தள்ளிவிட்டனர் என்றும், படுகாயமடைந்த அய்யப்பன் விழுப்புரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 26.04.2021 அன்று அதிகாலை உயிரிழந்தார். தலையில் ஏற்பட்ட பலத்த காயமே (Head injuries) மரணத்திற்கு முக்கியக் காரணம் என மருத்துவர் அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது என்றும், எனவே எதிரிகள் மீது கொலைச் சதி, கடத்தல், ஆபாசமாகத் திட்டுதல், சட்டவிரோதமாகத் தடுத்தல் மற்றும் கொலை (IPC 120B, 364, 294, 341, 324, 352, 302 r/w 34) ஆகிய பிரிவுகளின் கீழ் விக்கிரவாண்டி காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் வாதிட்டார். மேலும் இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அரசு தரப்பு வழக்கறிஞர் கீழ்க்கண்ட வாதங்களை முன்வைத்துள்ளார்.

2) இந்த வழக்கில் முக்கிய சாட்சியங்கள் மூலம், குறிப்பாக புகார்தாரரின் சாட்சியம் மூலம், புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை சங்கதிகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கண்ணுற்ற மற்றும் சம்பவயிட சாட்சியான புகார்தாரர்/அ.சா.1-ன் சாட்சியத்தின் மூலம், எதிரிகள் இந்த வழக்கில் கொலையுண்டு இறந்து போன அய்யப்பனை கடத்தி வந்து கடுமையாக தாக்கி கொலை செய்துள்ளார்கள் என்பது நிரூபணம் ஆகியுள்ளது. வழக்கில் கொலை செய்யப்பட்டு

இறந்து போன அய்யப்பனின் உடலில் இருந்த காயங்கள் அனைத்தும், பிரேத பரிசோதனைக்கு முன்பான காயங்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி அ.சா.1-ன் சாட்சியமானது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. புகார்தாரர் அய்யப்பனை தாக்க பயன்படுத்தி ஆயுதங்களை உறுதிப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார்.

3) இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சி அ.சா.2 கோபாலகிருஷ்ணன் மூலமும், மற்ற சாட்சிகள் அ.சா.3 ராஜா, அ.சா.6. இளையராஜா, அ.சா.7 முத்துகிருஷ்ணன் ஆகியோரின் சாட்சியத்தின் மூலமும், எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி முக்கிய கண்ணற்ற சாட்சிகள் அய்யப்பனை தாக்க பயன்படுத்திய ஆயுதங்களையும் அடையாளம் காண்பித்துள்ளனர்.

4) இந்த வழக்கில் முக்கிய சாட்சியான பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அ.சா.12 மருத்துவர் மதுவர்தனா என்பவரின் சாட்சியத்தின் மூலமும், அவர் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை, பிரேத பரிசோதனை இறுதி அறிக்கை, ஆகியவற்றின் மூலமும், கொலையுண்டு இறந்த அய்யப்பன் என்பவர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவினால் இறந்துள்ளார் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே மருத்துவ சாட்சியங்களும், அதை உறுதியூட்டும் மற்ற சாட்சிகளும், எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்துள்ளன.

5) மற்றொரு முக்கிய சாட்சியான பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி அ.சா.3 திரு.ராஜா என்பவரின் சாட்சியத்தின் மூலம், சம்பவ இடத்திலிருந்து சா.பொ.4 முதல் 9 ஆகிய சான்று பொருட்கள் ரத்தம் படிந்த சிமெண்ட் காரை, ரத்தம் படியாத சிமெண்ட் காரை, ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண், ரத்தம் படிந்த மற்றும் ரத்தம் படியாத வாட்டர் டேங்க் தூண் பகுதிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான சான்றாவணங்கள் அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.5 வரையிலான கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றில் அ.சா.3 கையெழுத்து செய்துள்ளார்.

6) இந்த வழக்கில் அரசு தரப்பில் காவல்துறை அதிகாரிகளின் சாட்சியங்களின் மூலம், குறிப்பாக புலன் விசாரணை அதிகாரிகளின் சாட்சியத்தின் மூலம், எதிரிகளுக்கு எதிராக முறையாக புலன் விசாரணை செய்யப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் சேகரிக்கப்பட்ட சங்கதியும், எதிரிகள் தான் குற்ற செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என்ற சங்கதியும், நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

7) இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியங்கள் மூலம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் குற்ற சம்பவத்திற்கான நோக்கம், சம்பவ இடம், குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட சான்றுபொருட்கள், இறந்த அய்யப்பனை கொலை செய்ய 1 முதல் 4 எதிரிகள் தீட்டிய சதி திட்டம், ஆகிய அனைத்துமே அரசு தரப்பில் சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. சாட்சியங்கள், சான்றாவணங்கள், ஆகிய அனைத்தும் சங்கிலி தொடர் போன்று தொடர்ந்து அமைந்துள்ளது. எனவே சூழ்நிலை

சாட்சியங்களின் அடிப்படையிலும், எதிரிகள் தண்டிக்கப்படத்தக்கவர்கள் ஆவார்கள்.

8) இந்த வழக்கில் 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அரசு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் பின்வருமாறு:-</u>**

1)புகார்தாரர் (அ.சா.1) சம்பவ நேரம் பகல் 12.00 மணி என்றும், இடம் முனியம்மாள் வீட்டு வாசல் என்றும் கூறுகிறார். ஆனால், மருத்துவமனை பதிவேட்டில் மதியம் 2.00 மணிக்கு விநாயகர் கோவில் அருகில் சம்பவம் நடந்ததாகத் தகவல் உள்ளது. புகாரில் மரக்கட்டில் கால் மற்றும் ஸ்பேனரால் தாக்கியதாகக் கூறிவிட்டு, மருத்துவரிடம் உருட்டுக்கட்டை, இரும்பு பைப் மற்றும் கத்தியால் தாக்கியதாக முன்னுக்குப் பின் முரணாகத் தெரிவித்துள்ளார்.

2) 2 வது எதிரி ஸ்பேனரால் தாக்கியதில் பற்கள் கொட்டிவிட்டதாக அ.சா.1 கூறினார். ஆனால், பிரேதப் பரிசோதனை அறிக்கையில் பற்கள் விழுந்ததற்கான எந்தச் சான்றும் இல்லை. தலையில் ஏற்பட்ட காயம் விபத்தினால் கூட ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதாக மருத்துவர் தெரிவித்துள்ளார்.

3) அ.சா.1 தனது கணவர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் போது காவல் நிலையத்தில் புகார் அளிக்கவோ அல்லது உடனே மீட்கவோ முயற்சிக்கவில்லை. மேலும், சண்டையை விலக்கிவிட்டதாகக் கூறப்படும் அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர், எதிரிகள் தாக்கியதைப் பார்த்ததாகக் கூறவில்லை.

4) இந்த வழக்கு, காவல் துறையில் பணிபுரியும் அ.சா.1-ன் உறவினர் கன்னியப்பனால் எதிரிகள் மீது பழிவாங்கும் நோக்கில் சோடிக்கப்பட்டது. சாட்சிகளின் மொழிகளிலும், மருத்துவ சான்றுகளிலும் பெரும் முரண்பாடுகள் இருப்பதால், இந்த வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை

5) அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டதாகக் கூறினாலும், அ.சா.1 தனது வாக்குமூலத்தில் அவர்கள் தடுத்ததாகக் குறிப்பிடவில்லை. மேலும், அ.சா.2 மற்றும் அ.சா.3-ன் வாக்குமூலங்களை விசாரணை அதிகாரி (IO) திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

6) அ.சா. 1(நதியா - புகார்தாரர்): இவர் சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறினாலும், இவர் அந்த நேரத்தில் தன் தாய் வீட்டில் இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் ஆவணங்கள் மூலம் எழுகிறது. அ.சா.2 (கோபாலகிருஷ்ணன்): அய்யப்பனை எதிரிகள் கடத்தி வந்ததைப் பார்த்ததாகக் கூறுகிறார், ஆனால் இவரது வாக்குமூலத்தில் கால நேரங்கள் தொடர்பாகப் பல முரண்பாடுகள் உள்ளன.

7) அ.சா. 9 & 10 (மகசர் சாட்சிகள்): இவர்கள் இந்த வழக்கில் பிறழ் சாட்சிகளாக (Hostile Witnesses) மாறியுள்ளனர்; தாங்கள் எங்கும் கையெழுத்திடவில்லை என்றும், தங்களை போலீசார் விசாரிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

8) அய்யப்பனுக்கு ஏற்பட்ட காயங்கள் இருசக்கர வாகன விபத்தினால் கூட ஏற்பட்டிருக்கலாம் என மருத்துவர் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

9) அ.சா.2 & 5: சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் சாட்சிகள் ஆவார்கள். ஆனால், அ.சா.5 நீதிமன்ற விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறினார். தலையில் ஏற்பட்ட காயம் மரணத்தை விளைவிக்கக் கூடியது என மருத்துவர் (அ.சா.12) உறுதி செய்துள்ளார். ஸ்பேனரால் தாக்கியதில் பற்கள் கொட்டியதாகக் கூறப்பட்டாலும், பிரேதப் பரிசோதனை அறிக்கையில் அத்தகைய காயங்கள் ஏதும் இல்லை. இக்காயங்கள் விபத்தினால் (Accident) கூட ஏற்பட்டிருக்கலாம் என மருத்துவர் குறுக்கு விசாரணையில் தெரிவித்துள்ளார்.

10) சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் நேரம் குறித்து சாட்சிகள் முன்னுக்குப் பின் முரணாகக் கூறுகின்றனர். பாதிக்கப்பட்ட அய்யப்பன் மதியம் 2:00 மணிக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக ஒரு இடத்திலும், மாலை 4:30 மணி வரை சம்பவம் நடந்ததாகச் சாட்சிகள் தரப்பிலும் மாறுபட்ட தகவல்கள் உள்ளன. எதிரிகள் 1 மற்றும் 2 அய்யப்பனை எத்தனை மணிக்கு அழைத்து வந்தார்கள் என்பதிலும் தெளிவில்லை (காலை 10:00, 11:00 அல்லது 12:00 மணி என வெவ்வேறு நேரங்கள்

குறிப்பிடப்பட்டுள்ளன).

11) சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதங்கள் (மரக்கட்டில் கால், இரும்பு ஸ்பேனர், கட்டை) உண்மையில் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதா? என்பதில் சந்தேகம் எழுகிறது. கைப்பற்றப்பட்ட பொருட்களில் இருந்த ரத்தக் கரைகள் அய்யப்பனுடைய ரத்த வகையோடு ஒத்துப்போகிறதா என்பதற்கான அறிவியல் பூர்வமான ஆய்வக அறிக்கை (Forensic Report) தாக்கல் செய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் எதிரிகளின் கைரேகைகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

12) நேரில் பார்த்ததாகச் சொல்லப்படும் சாட்சிகள் (அ.சா.1 நதியா மற்றும் பிறர்), காவல்துறை விசாரணையின் போது சொன்ன தகவல்களையும் நீதிமன்றத்தில் சொன்ன தகவல்களையும் மாற்றிப் பேசியுள்ளனர். குறிப்பாக, சம்பவம் நடந்த இடங்கள் (விநாயகர் கோவில், வாட்டர் டேங்க், ஏரிக்கரை) மற்றும் தாக்குதல் நடத்திய முறை குறித்து தெளிவான ஒருமித்த கருத்து இல்லை.

13) வழக்குச் சொத்துக்களை (ஆயுதங்களை) கைப்பற்றிய பிறகு, அவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைக்க 42 நாட்கள் காலதாமதம் ஆகியுள்ளது. இதற்குச் சரியான காரணம் விளக்கப்படவில்லை. புலனாய்வு அதிகாரி (அ.சா.15) பல முக்கிய விவரங்களை (தேதி, இடம், நேரக் குறிப்புகள்) தனது அறிக்கையில் முறையாகப் பதிவு செய்யவில்லை என்பதைச் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

14) சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் 25.04.2021 அன்று பகல் 12:00 மணிக்கு, விநாயகர் கோவில் எதிரில் 1 முதல் 4 வரையிலான எதிரிகள் அய்யப்பனைத் தாக்கியதாக அ.சா.1 (நதியா) தனது விசாரணையில் கூறவில்லை எனப் புலனாய்வு அதிகாரி ஒப்புக்கொண்டுள்ளார். அய்யப்பனை 1, 2 எதிரிகள் அழைத்து வந்ததாக அய்யப்பன் தன்னிடம் சொன்னதாக அ.சா.1 கூறியது, 161 வாக்குமூலத்தில் இல்லை. சம்பவத்தைக் கண்ணுற்றதாகச் சொல்லப்படும் கோபாலகிருஷ்ணன் (அ.சா.2) மற்றும் பிரகாஷ் (அ.சா.5) ஆகியோரின் சாட்சியங்கள் நம்பகத்தன்மையற்றவை ஆகும்.

15) அ.சா.1-ன் உடன் பிறந்த அண்ணன் தான் அ.சா.4 (ஜெயகணேஷ்) என்ற உண்மையை அதிகாரி மறைக்க முயன்றுள்ளார். சாட்சி இளையராஜா (அ.சா.6) அளித்த தகவல்களையும், முத்துகிருஷ்ணன் (அ.சா.7) அய்யப்பனின் நெருங்கிய உறவினர் என்பதையும் புலன் விசாரணை அதிகாரி திட்டவட்டமாக மறுத்துள்ளார். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைச் சாட்சிகளிடம் காண்பித்து 161 வாக்குமூலத்தில் உறுதி செய்யவில்லை.

16) எதிரிகள் பனையபுரம் கூட்டுரோட்டில் வைத்து கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுவதில் சந்தேகம் உள்ளது. சுமார் 10 கி.மீ தூரத்தில் தலைமறைவாக இருந்த எதிரிகள் எதற்காக மீண்டும் விக்கிரவாண்டி நோக்கி வரவேண்டும் என்ற கேள்விக்கு அதிகாரி பதிலளிக்கவில்லை. எதிரிகளை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று, உடல் ரீதியாகத் துன்புறுத்தி, அதிகாரியால் ஜோடிக்கப்பட்ட ஒப்புதல்

வாக்குமூலங்களில் கையெழுத்து பெறப்பட்டது.

17) அய்யப்பன் தங்கியிருந்த இடம் மற்றும் எதிரிகள் அவரைத் தாக்கத் திட்டமிட்டது குறித்து இறுதி அறிக்கையில் தெளிவான விவரங்கள் இல்லை. சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் சிபெருமாள்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த நடுநிலையான சாட்சிகள் எவரையும் விசாரிக்கவில்லை. இது வழக்கு ஜோடிக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறது என வாதம் முன்வைக்கப்படுகிறது.

18) அ.சா.1 (நதியா) மற்றும் அ.சா.2 (கோபாலகிருஷ்ணன்): இவர்களது சாட்சியங்கள் ஒருவருக்கொருவர் ஒத்துப்போகவில்லை. சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் நேரம், இடம் மற்றும் தாக்குதல் முறை குறித்து இவர்கள் முன்னுக்குப் பின் முரணாகக் கூறியுள்ளனர்.

19) அ.சா.3 (ராஜா): இவர் அய்யப்பனை எதிரிகள் கடத்தி வந்ததைப் பார்த்ததாகக் கூறுவது ஜோடிக்கப்பட்டது. இவர் அரசுத் ஒரு "வழிகாட்டப்பட்ட சாட்சியாவார்" (Tutored Witness)

20) வழக்கின் முக்கிய சாட்சிகளான அ.சா.9, 10 மற்றும் 11 ஆகியோர் அரசுத் தரப்புக்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சிகளாக (Hostile Witnesses) மாறியுள்ளனர்.

21) அய்யப்பனின் உடலில் இருந்த 6 காயங்களும் ஒரே அளவான (0.5 செ.மீ ஆழம்) ஆழத்தைக் கொண்டுள்ளன. ஆனால், தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் ஆயுதங்கள் வெவ்வேறு வடிவம் கொண்டவை. இது முரணாக உள்ளது.

22) எதிரிகள் 1 முதல் 3 வரை எங்கு வைத்து சதித் திட்டம் (Conspiracy) தீட்டினார்கள் என்பதற்கான எந்த ஆதாரத்தையும் அதிகாரி தாக்கல் செய்யவில்லை. அய்யப்பன் தங்கியிருந்த இடம் மற்றும் அவர் கடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் விபரங்களில் உள்ள ஓட்டைகளை புலன் விசாரணை அதிகாரி ஒப்புக்கொண்டுள்ளார். வழக்கிற்காகக் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் மற்றும் தடயங்களை முறையாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை.

23) எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 302 (கொலை), 364 (கடத்தல்), 120(b) (சதித் திட்டம்) உள்ளிட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படாத நிலையில், அவர்களை விடுதலை (Acquittal) செய்ய வேண்டும்

12) இருதரப்பு வாதங்களின் அடிப்படையில், இந்த வழக்கில் இந்த நீதிமன்றம் அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மருத்துவ சாட்சியத்தின் அடிப்படையிலும், புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளின் அடிப்படையிலும், ஒப்புதல் வாக்குமூல மற்றும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளின் அடிப்படையிலும், காவல்துறை அதிகாரிகள் மற்றும்

**புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் அடிப்படையிலும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை வரிசையாக பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்று கருதுகிறது. மேலும் சம்பவ இடம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதையும், குற்றத்திற்கான நோக்கம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதையும், கண்டறிய வேண்டியது அவசியம் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.**

**13) சம்பவ இடம் குறித்து அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?**

இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் புகார்தாரரின் (அ.சா.1) சாட்சியத்தின் மூலம் குற்றம் நடந்த சம்பவ இடம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், கண்ணுற்ற சாட்சிகளான கோபாலகிருஷ்ணன் (அ.சா.2), பார்வை மகசர் சாட்சி ராஜா (அ.சா.3), மற்ற சாட்சிகள் இளையராஜா (அ.சா.6) மற்றும் முத்துக்கிருஷ்ணன் (அ.சா.7) ஆகியோரின் சாட்சியங்கள் சம்பவ இடத்தை உறுதி செய்கின்றன என்றும், மேலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தை உறுதி செய்கின்றது என்றும், எனவே இந்த வழக்கில் சம்பவ இடம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார். இதை எதிர்த்து வாதிட்ட கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் இடங்கள் குறித்து சாட்சிகள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகின்றனர் என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபட சாட்சிகள் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், எனவே, சம்பவ இடம் முறையாக நிரூபிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களின் அடிப்படையில், அரசு தரப்பு சாட்சிகளை கவனத்துடன் பரிசீலனை செய்து பார்க்கும்போது, இந்த வழக்கில் அ.சா.1 மற்றும் புகார்தாரரான இறந்தவரின் மனைவி தனது சாட்சியத்தில் முதல் விசாரணையில் "முனியம்மாள் புதிதாக கட்டி வந்த வீடு அருகில் வைத்து சரத்குமார், சரவணன், ஜானகி, குமாரவேல் ஆகியோர் தனது கணவரை மடக்கி எதிரி சரத்குமார் தன் கையில் வைத்திருந்த கட்டில் காலால் தனது கணவரின் தலையின் பின்புறம் அடித்தார் என்று 12.00 மணிக்கு சம்பவம் நடந்த இடத்தை குறித்தும், பின்னர் "தனது கணவரை விநாயகர் கோவிலுக்கு அருகில் உள்ள தண்ணீர் டேங்க் அருகில் இழுத்து சென்றார்கள் என்றும், தனது கணவரை ஜட்டியுடன் நிற்க வைத்து தண்ணீரை ஊற்றி ஊற்றி 1 முதல் 4 எதிரிகள் அடித்தார்கள் என்றும்" மற்றொரு சம்பவ இடம் குறித்தும், தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.2 திரு. கோபாலகிருஷ்ணன் தனது சாட்சியத்தில், "அதன்பிறகு 25.04.2021-ந் தேதி பகல் 12.00 மணியளவில் எதிரிகள் சரத்குமார், சரவணன் ஆகியோர் ஐயப்பனை ஒரு பைக்கில் அடித்து அழைத்து தங்கள் ஊருக்குள் வந்தார்கள் என்றும், வீட்டு அருகில் வைத்து ஒரு உடைந்த கட்டில் கால் கொண்டு 1 வது எதிரி சரத்குமார் ஐயப்பனின் தலையில் அடித்தார் என்றும், 1, 2 எதிரிகள் ஐயப்பனை தரதரவென்று ஜட்டியோடு இழுத்து பிள்ளையார் கோவில் வாட்டர் டேங்க் அருகில் அழைத்து சென்றார்கள் என்றும், அங்கு வைத்தும் எதிரிகள் 4 பேரும் ஐயப்பனை அடித்தார்கள் என்றும்", சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 இளையராஜா தனது சாட்சியத்தில் "பிறகு இறுதியாக தண்ணி டேங்க் அழைத்துவந்து கட்டிப்போட்டு அவரை அடித்தார்கள் என்றும், அவ்வாறு அடித்ததாக இறந்தவரின் அக்கா பெயர் பிரியா என்பவர் தொலைபேசி மூலம் தனக்கு தகவல் கொடுத்து கொள்வார் என்றும், அவர் தகவல் கொடுத்து தான் சொன்ன தகவலை தன்னிடம் சொன்னார் என்றும், அதன் பிறகு தான் சுமார் 3 மணிக்குதான் அங்கு சென்றேன் என்றும், அய்யப்பன் ஜட்டியோடு உடல் முழுவதும் ரத்தத்துடன் விழுந்துகிடந்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 முத்துகிருஷ்ணன் "தான் இதை கேள்விப்பட்டவுடன் வண்டியை எடுத்துக் கொண்டு சிவபெருமான்பாளையத்திற்கு சென்றேன் என்றும், சென்ற போது தன் மாமா சம்பவ இடத்தில் ரத்த வெள்ளத்தில் ஜட்டியோடு படுத்திருந்தார் என்றும், தலை முழுவதும் பலத்த ரத்தக்காயங்கள் இருந்தது என்றும், அதை பார்த்தவுடன் தான் எதிரிகளிடம் தனது மாமா அய்யப்பன் செய்தது தவறு தான் அதற்காக அவரை அடித்துவிட்டீர்கள் என்றும், ஆனால் அவரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து செல்லவிடுங்கள் என்றும் முடிந்தவுடன் காவல்துறையிடம் ஒப்படைக்கிறோம் என்று கேட்டதற்கு அவர்கள் தவறான வார்த்தை சொல்லி ஒரு மணி நேரமாக அவரை அனுப்பவேயில்லை என்றும், அப்போது 4ம் எதிரி அவரது தலையில் மண்ணை வாரி வைத்துவிட்டார் என்றும்," சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்கில் அ.சா.8 ஆன செல்வகுமார் தனது சாட்சியத்தில், "விக்கிரவாண்டி காவல் துறையினர் அங்கு சிவபெருமான் பாளையத்தை சேர்ந்த ஐய்யப்பன் என்பவரை

கொலை செய்த வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்த்து விசாரணை செய்து வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும், மேற்படி கார்த்திகேயன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.6 என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இந்த வழக்கில் அ.சா.15 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில், சம்பவ இடங்கள் சென்று, பார்வை மகசர் தயார் செய்தது குறித்தும், மாதிரி வரைபடங்கள் தயார் செய்தது குறித்தும், அந்த இடங்களில் இருந்து ரத்தக்கறை படிந்த மண், ரத்தக்கறை படியாத மண், ரத்தக்கறை படிந்த சிமெண்ட் காரை, ரத்தக்கறை படியாத சிமெண்ட் காரை ஆகியவற்றை கைப்பற்றியது குறித்தும், சாட்சியமளித்துள்ளார்.

மேலும் இதுகுறித்து அ.சா.3.திரு.ராஜா தனது சாட்சியத்தில், " அந்த பார்வை மகசர் அசா.ஆ.2. இரத்தம் படிந்த சிமெண்ட் காரை, இரத்தம் படியாத சிமெண்ட் காரை முனியம்மாள் வீட்டு எதிரில் சிமெண்ட் ரோட்டில் எடுத்தார்கள் என்றும், அதன்பிறகு தங்கள் ஊர் கோவில் அருகிலும் இரத்தம் படிந்த மண், மற்றும் இரத்தம் படியாத மண் ஆகியவற்றையும் எடுத்தார்கள் என்றும், அதன்பிறகு தங்கள் ஊர் வாட்டர் டேங்க் தூணில் இரத்தம் படிந்திருந்தது என்றும், அதையும் உடைத்து இரத்தம் படிந்த மற்றும் இரத்தம் படியாத வாட்டர் டேங்க் தூண் பகுதியை உடைத்து எடுத்து கைப்பற்றினார்கள் என்றும், போலீசார் அவ்வாறு கைப்பற்றியதற்கு தனித்தனியாக கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும், ராஜ்குமாரும், சாட்சி கையொப்பம் போட்டோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் 3 கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள

2 வது கையொப்பங்கள் தன்னுடையது என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர்கள் முறையே அசா.ஆ.3 முதல் 5 வரை என்றும், தன்னிடம் காட்டப்படும் சான்று பொருட்கள் தான் அன்று கைப்பற்றப்பட்டவை என்றும், இரத்தம் படிந்த சிமெண்ட் காரை, இரத்தம் படியாத சிமெண்ட் காரை முறையே அ.சா.பொ.4, 5 ஆகும் என்றும், இரத்தம் படிந்த மண், மற்றும் இரத்தம் படியாத மண் முறையே அ.சா.பொ.6, 7 ஆகும் என்றும், இரத்தம் படிந்த மற்றும் இரத்தம் படியாத வாட்டர் டேங்க் தூண் பகுதிகள் முறையே அ.சா.பொ.8, 9 என்றும்", சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்கண்ட அனைத்து சாட்சியங்களையும் ஒன்றாக இணைத்து பரிசீலனை செய்து பார்க்கும் போது இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது போல "பிற்பகல் 12.00 மணிக்கு சிவபெருமான்பாளையம் பிள்ளை கோவில் தெருவில் முனியம்மாள் என்பவர் புதிதாக கட்டிவரும் வீட்டில் முன்பு கொண்டு வந்தும், ரோட்டில் வைத்து அய்யப்பனை கொலை செய்யும் பொதுவான நோக்கத்துடன் (common intention) 1 முதல் 4 எதிரிகள் ஒன்று சேர்ந்தும், மேலும் தொடர்ச்சியாக 1 முதல் 4 எதிரிகள் அய்யப்பனை அங்கிருந்த பிள்ளையார் கோவில் வாட்டர் டேங்க் அருகில் சட்டவிரோதமாக தடுத்து கொண்டும்" ஆகிய சம்பவ இடங்களில் எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள் இறந்த அய்யப்பனை தாக்கியுள்ளார்கள் என்பது தெளிவாக தெரிய வருகிறது. இதுகுறித்து எதிரிகள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது போல அரசு தரப்பு சாட்சிகளின் சிறு சிறு முரண்பாடுகள் இருந்தாலும், அது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் வகையில் அமையவில்லை. எனவே சம்பவ இடம் குறித்து அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**14) குற்ற சம்பவத்திற்கான நோக்கம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?**

இந்த வழக்கில் இறுதி அறிக்கையில் "மேற்படி 2-வது எதிரியின் மனைவி விஜயகுமாரிக்கும், மேற்படி அய்யப்பனின் மனைவியான சங்கதிகளின்படியான புகார்தாரர் நதியாவிற்கும் அடிக்கடி பிரச்சனைகள் ஏற்பட்ட நிலையில், சம்பவத்திற்கு 4 நாட்கள் முன்பு பிரச்சினை ஏற்பட்டும், சாட்சி நதியா தன் தாய் வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும், இதனால் ஆத்திரமுற்ற மேற்படி அய்யப்பன் கடந்த 22.04.2021 பிற்பகல் 12.00 மணிக்கு 2 வது எதிரியின் மனைவி விஜயகுமாரியை தாக்கி பலத்த காயத்தை விளைவித்து தலைமறைவாகியுள்ளார் என்றும், இதனை தொடர்ந்து அன்று 22.04.2021 விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சையில் விஜயகுமாரி இருந்த போது அங்கு 2-வது எதிரியுடன் அவரது மகன்களான 1 வது எதிரி சரத்குமார் மற்றும் மைத்துனரான 3-வது எதிரி குமரவேல் ஆகிய மூவரும் அய்யப்பனை தேடி கண்டுபிடித்து கொலை செய்ய குற்றமுறு சதிதிட்டம் தீட்டியுள்ளனர்" என்று குற்றத்திற்கான நோக்கமாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அ.சா.1 ஆன இறந்த அய்யப்பனின் மனைவி நதியா தனது சாட்சியத்தில் "2 வது எதிரி சரவணனின் மனைவியான விஜயகுமாரி என்பவர் தன்னை பற்றி தனது கணவரிடம் தவறாக சொல்லிவிட்டார் என்றும், அதனால் தனது

கணவர் தன்னிடம் சண்டை போட்டு வந்தார் என்றும், அதனால் தான் தனது பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தனது அம்மா வீட்டிற்கு பண்டசோழ நல்லூர் சென்றுவிட்டேன் என்றும், தங்கள் வீட்டிற்கு பக்கத்தில்தான் சரவணன் வீட்டார் மாடுகளை கட்டுவார்கள் என்றும், விஜயகுமாரி மாடு கட்டும்போது தனது கணவர் நீ தனது மனைவியை பற்றி தவறாக சொன்னதால்தான் சண்டை வந்து தனது மனைவி பிரிந்து சென்றுவிட்டாள் என்று சொல்லி தனது கணவர் விஜயகுமாரியிடம் சண்டை போட்டுள்ளார் என்றும், தனது கணவர் தள்ளிவிட்டதில் விஜயகுமாரிக்கு தலையில் அடிபட்டது என்றும், தனது கணவர் தனது அண்ணனுக்கு போன் செய்து சண்டை வந்ததாகவும், தான் தள்ளி விட்டதில் விஜயகுமாரிக்கு அடிபட்டதாகவும் சொன்னார் என்றும், அதனால் தனது அண்ணன் ஜெயகணேஷ் தன்னை அழைத்து கொண்டு வந்து தனது கணவர் வீட்டில் விட்டுவிட்டார் என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்.

அசா. 2 திரு. கோபாலகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் "22.04.2021-ந் தேதி காலையில் ஐயப்பனுக்கும், 2 வது எதிரி சரவணனுக்கும், ஐயப்பன் வீட்டு அருகில் உள்ள சரவணனுடைய மாட்டுக்கொட்டை அருகில் காலை 7, 7.30 மணியளவில் வாய் வேலைக்கு தகராறு நடந்தது என்றும், அதைப்பார்த்த தான் சென்றுவிட்டேன் என்றும், ஏன் தகராறு செய்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், சரவணனின் மனைவியை ஐயப்பன் அடித்துவிட்டார் என்று அன்று மாலை தான் வேலை முடித்துவரும்போது தான் கேள்விப்பட்டேன் என்றும், ஆனால் ஐயப்பன் அவரது மனைவியை சந்தித்து சொல்லியுள்ளார் என்றும், அதனால், அவர்கள் இருவருக்குள்ளும் தகராறு நடந்துள்ளது என்றும்," சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.4.திரு.ஜெயகணேஷ் தனது சாட்சியத்தில் "2 வது எதிரி சரவணனும், அவரது மனைவியும், தனது தங்கையின் நடத்தையை பற்றி தவறாக பேசியதால் அது சம்பந்தமாக சண்டை நடந்தது என்றும், அதனை தொடர்ந்து தனது தங்கைக்கும், அவரது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு, தனது தங்கை கோவித்து கொண்டு தங்கள் வீட்டிற்கு வந்திருந்தார் என்றும், தனது மாமா சரவணனின் மனைவியிடம் தகராறு செய்து தாக்கிவிட்டார் என்றும், அதனால் அவர்கள் மருத்துவமனைக்கு சென்றுள்ளார்கள் என்றும், விவரம் தெரிந்து தான் தனது தங்கையை அழைத்து வந்து அவரது கணவர் வீட்டில் காலையில் விட்டேன் என்றும்," சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி சாட்சியங்களை கவனத்துடன் பரிசீலனை செய்து பார்க்கும் போது, அரசு தரப்பில் வாதம் முன்வைத்தது போல "எதிரிகளுக்கும், மேற்படி 2-வது எதிரியின் மனைவி விஜயகுமாரிக்கும், மேற்படி அய்யப்பனின் மனைவியான சங்கதிகளின்படியான புகார்தாரர் நதியாவிற்கும் அடிக்கடி பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளது என்றும், சம்பவத்திற்கு 4 நாட்கள் முன்பு பிரச்சினை ஏற்பட்டு, சாட்சி நதியா தன் தாய் வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும், இதனால் ஆத்திரமுற்ற மேற்படி அய்யப்பன் கடந்த 22.04.2021 பிற்பகல் 12.00 மணிக்கு 2 வது எதிரியின் மனைவி விஜயகுமாரியை தாக்கி பலத்த காயத்தை விளைவித்துள்ளார் என்றும், இதனால் எதிரிகள் கொலை செய்யப்பட்டு இறந்து போன அய்யப்பன் மீது முன்விரோதம் கொண்டுள்ளனர் என்பதும், இதுதான் குற்ற சம்பவத்திற்கான நோக்கம் என்பதும் தெளிவாக தெரிய வருகிறது. எனவே குற்ற சம்பவத்திற்கான நோக்கம் அரசு தரப்பில்

நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் இவ்வாறாக தீர்மானிக்கிறது.

**15) கொலை செய்யப்பட்டு இறந்து போன அய்யப்பன் என்பவரின் மரணத்தின் தன்மை, மரணத்திற்கான காரணம் மற்றும் இது குறித்த மருத்துவரின் சாட்சியம்:-**

இந்த வழக்கில் அசா. 12. ஆக விசாரிக்கப்பட்ட மருத்துவர் மதுவர்தனா தனது சாட்சியத்தில், தான் தற்போது அரசு விழுப்புரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் முதுநிலை உதவி பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன் என்றும், தான் அதே பணியிலிருந்த போது கடந்த 26/04/2021 அன்று விக்கிரவாண்டி காவல் நிலைய கு.எண்.221/2021 என்ற குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்த நபர் ஐய்யப்பன், 44 வயது த/பெ குப்பன், என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்குமாறு விக்கிரவாண்டி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில், முதல் நிலை காவலர் எண்.2606 திரு. வெங்கடேசன் என்பவர் மூலம் பெற்றுக்கொண்டு, அன்றைய தினமே பிற்பகல் 12.30 மணிக்கு மேற்படி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனையை தொடங்கினேன் என்றும், மேற்படி இறந்த நபரின் உடலில் காணப்பட்ட அங்க மச்ச அடையாளங்கள் சரிபார்க்கப்பட்டது என்றும், உடலில் மீது பிணவிறைப்பு தன்மை, உடலின் மேல் பகுதியில் மிகுதியாக காணப்பட்டது என்றும், கண்கள், மற்றும் வாய் மூடிய நிலையிலும், விரல் நகங்கள் நீல நிறத்திலும் காணப்பட்டது என்றும்,

**உடலின் மீது காணப்பட்ட காயங்கள் பின்வருமாறு:**

சுமார் 3 செ.மீ நீளம், 2 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது இடது பக்க தலையில் இடது காதின் பின்புறத்தில் இரண்டு தையல்களுடன் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது என்றும்.

சுமார் 4 செ.மீ நீளம், 3 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது வலது கையின் கட்டை விரலில் அடிப்பகுதியில் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது என்றும்,

சுமார் 2 செ.மீ நீளம், 2 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது மேல் உதட்டின் மேல் பகுதியில் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது என்றும்,

சுமார் 4 செ.மீ நீளம், 2 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழமும் கொண்ட கிழிந்த காயமானது இடது பக்க முகவாய் கட்டையில் 3 தையல்களுடன் காணப்பட்டது. அதன் முனைகள் சரிவர இல்லாமல் சிவப்பு நிறத்திலும், கன்றிய காயங்களுடன் காணப்பட்டது என்றும்,

சுமார் 11 செ.மீ நீளம், 9 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழம் கொண்ட கன்றிய காயமானது வலது முழங்கையின் வெளிப்புறத்தில் சிவப்பு நிறத்தில் காணப்பட்டது என்றும், மேற்படி பரிசோதனையின் போது தலையில் முடி தோலில் சுமார் 16 செ.மீ நீளம், 12 செ.மீ அகலம், 0.5 செ.மீ ஆழம் கொண்ட கன்றிய காயமானது இடது பக்க தலையில் காணப்பட்டது என்றும், மண்டை ஓடு மூளை உறை ஆகியவை இயல்பான நிலையில்

காணப்பட்டது என்றும், மூளையில் இடது புறத்தில் மற்றும் பக்க வாட்டில் மேற்புறத்தில் இரத்த கட்டுகள் காணப்பட்டது என்றும், மண்டை ஓட்டின் அடிப்பகுதி இயல்பான நிலையில் காணப்பட்டது என்றும்,

கழுத்தின் நாவடி மற்றும் குரல்வளையில் உள்ள எலும்புகள் அதனை சுற்றியுள்ள தசைகள் ஆகியவை இயல்பான நிலையில், மூச்சு குழாய் மற்றும் உணவு குழாய் இயல்பான நிலையிலும், அன்னிய பொருட்கள் எதுவும் இல்லாமலும் காணப்பட்டது என்றும், மார்பில் குறுத்து எலும்புகள், மற்றும் விலா எலும்புகள், நுரையீரல்கள், இருதயம், மற்றும் அதனை சுற்றியுள்ள தமனிகள் ஆகியவை இயல்பான நிலையில் காணப்பட்டது என்றும்,

வயிற்றில் இரைப்பையில் சுமார் 100 மி.லி அளவிலான மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது என்றும், அதில் வாடை எதுவும் தென்படவில்லை என்றும், மற்ற உடல் உள்ளுறுப்புகள் அனைத்தும் இயல்பான நிலையிலும் வெட்டு தோற்றத்தில் இரத்தம் தோய்ந்த நிலையிலும், இடுப்பு எலும்புகள் மற்றும் தண்டுவடம் ஆகியவை இயல்பான நிலையிலும் காணப்பட்டது என்றும்,

பிரேத பரிசோதனையானது பிற்பகல் 1.30 மணிக்கு முடிக்கப்பட்டது என்றும், உடலின் மீது காணப்பட்ட காயங்கள் அனைத்தும், இறப்பிற்கு முன்பாக ஏற்பட்ட காயங்கள் என்றும், பரிசோதனையின் போது சேகரம் செய்யப்பட்ட இரத்தம் மற்றும் உடல் உள்ளுறுப்புகள் இரசாயன பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது என்றும்,

இரத்தம் வகை அறியும் பொருட்டு இரத்தம் தோய்ந்த பஞ்சானது ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும், அந்த ஆய்வகத்தின் அறிக்கை 10/06/2021 அன்று பெறப்பட்டது என்றும், அதில் மேற்படி இறந்த நபரின் இரத்தத்திலும், உடல் உள்ளுறுப்புகளிலும், சாராயமோ, வேறு எந்த நச்சு பொருட்களோ தென்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்,

**16) மருத்துவர் கருத்துரை, மேற்படி பிரேத பரிசோதனை மற்றும் ஆய்வக அறிக்கை, ஆகியவற்றின் அடிப்படையில், மேற்படி இறந்த நபர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவினால் இறந்திருக்கக்கூடும் என்று எனது இறுதி கருத்துரை வழங்கினேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஆயுதங்கள் (எண்ணிக்கை 4) அவைகளால் தாக்கினால் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயங்களும் இறப்பும் ஏற்பட வாய்ப்புள்ளதா? என்றால் உள்ளது என்றும்,**

தன்னிடம் காட்டப்படும் தான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அசா.ஆ.13 என்றும், தன்னுடைய இறுதி கருத்துரை அசா.ஆ.14 என்றும், தான் பெற்ற இரசாயன பரிசோதனை அறிக்கை VPM/TOX.H/612/2021 நாள். 31.05.2021 பெறப்பட்டது என்றும், அது அ.சா.ஆ.15 என்றும், நான் பெற்ற குருதியியல் அறிக்கை VPM/BIOL/198/2021 dt.31/05/2021, அ.சா.ஆ.16 என்றும், இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி மருத்துவரின் சாட்சியத்தில் இருந்து இறந்த நபர் அவருக்கு தலையில்

ஏற்பட்ட காயங்களின் விளைவினால் இறந்துள்ளார் என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேலும் இறந்த நபருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் அவர் இறப்பதற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் என்பது தெளிவாக மருத்துவரின் இறுதி அறிக்கை அ.சா.ஆ.14 மூலம் தெரிய வருகிறது. மேலும் அ.சா.ஆ.13 ஆன பிரேத விசாரணை அறிக்கையின் மூலமும், கண்ணுற்ற சாட்சியங்களின் சாட்சியத்தின் மூலமும், மேற்படி காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என்பது தெரிய வருகிறது. மேலும் காயங்களின் தன்மை மற்றும் தலையில் ஏற்பட்டுள்ள காயத்தின் அளவு ஆகியவற்றை கவனத்துடன் பரிசீலனை செய்து பார்க்கும் போது, இறந்த அய்யப்பனின் மரணம் கொலைதான் என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் மருத்துவரின் சாட்சியத்தின் மூலம் இந்த நீதிமன்றத்தில் சான்று பொருட்களாக குறிப்பிடப்பட்டுள்ள ஆயுதங்கள் தாக்கினால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பது தெளிவாக தெரிய வருகிறது.

எதிரிகள் தரப்பில் மருத்துவர் தனது குறுக்கு விசாரணையில், விபத்தின் காரணமாக இது போன்ற காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என ஒப்புக்கொண்டதாக வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த வழக்கை பொறுத்தவரையில் முக்கிய சாட்சிய, சான்றாவணங்கள் எதிரிகள் இறந்த அய்யப்பனை தாக்கியதை உறுதி செய்துள்ள நிலையில், மேற்படி அனுமானத்தின் அடிப்படையில் எதிரிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்க இயலாது. மேலும் மருத்துவ சாட்சியம் சான்று பொருட்களால் தான் காயம் ஏற்பட்டது என்பதையும், இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது போல் காயம் ஏற்பட்டுள்ளது என்பதையும், நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்ற எதிரிகள்

தரப்பு வாதம் அடிப்படையற்றது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், இறந்த அய்யப்பனின் மரணம் கொலைதான் என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்கண்ட கொலைக்குற்றத்தை எதிரிகள் தான் செய்தார்களா? என்பதை கண்ணுற்ற மற்றும் இதர சாட்சிகளின் சாட்சிகளின் மூலம் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

**17) புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கானது நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?**

இந்த வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட நதியா என்பவர் இறந்த அய்யப்பனின் மனைவி ஆவார். மேலும் அவருக்கும், 2 ம் எதிரியின் மனைவிக்கும் ஏற்பட்ட சண்டை தான் பிரச்சனைக்கு அடிப்படையான காரணமாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. சம்பவத்தின் போது அசா.4.திரு.ஜெயகணேஷ் தனது தங்கையான நதியாவை வீட்டிற்கு கொண்டு வந்து விட்டுவிட்டதாக தெரிவித்துள்ளார். மேற்படி அ.சா.1 ஆன புகார்தாரர் தனது சாட்சியத்தில், "விஜயகுமாரி மாடு கட்டும்போது தனது கணவர் நீ தனது மனைவியை பற்றி தவறாக சொன்னதால்தான் சண்டை வந்து தனது மனைவி பிரிந்து சென்றுவிட்டாள் என்று சொல்லி தனது கணவர் விஜயகுமாரியிடம் சண்டை போட்டுள்ளார் என்றும், தனது கணவர் தள்ளிவிட்டதில் விஜயகுமாரிக்கு தலையில் அடிபட்டது என்றும், தனது கணவர் தனது அண்ணனுக்கு போன் செய்து சண்டை வந்ததாகவும், தான் தள்ளி விட்டதில் விஜயகுமாரிக்கு அடிபட்டதாகவும் சொன்னார் என்றும், அதனால் தனது அண்ணன் ஜெயகணேஷ் தன்னை அழைத்து கொண்டு

வந்து தனது கணவர் வீட்டில் விட்டுவிட்டார் என்றும், தனது கணவர் நடந்த சம்பவத்தை தன்னிடம் சொன்னார் என்றும், 22/04/2021ம் தேதி சாயந்திரம் 6, 7 மணியளவில் தனது கணவர் வீட்டை விட்டு வெளியே சென்றார் என்றும், அன்று இரவு முழுவதும் வரவில்லை என்றும், மறுநாளும் வரவில்லை என்றும், எனவே தான் காலையிலேயே தனது தாய் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், அங்கு இருந்துவிட்டு தனது கணவர் குறித்த தகவல் இல்லாததால் மறுநாள் தனது அண்ணனை அழைத்து கொண்டு தனது கணவர் வீட்டிற்கு வந்தேன் என்றும், வீட்டில் தனது கணவரும் இல்லை என்றும்"

"மேலும் 25.04.2021-ம் தேதி மதியம் 12.00 மணியளவில் தங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள விநாயகர் கோவில் அருகில் சத்தம் கேட்டது என்றும், அதனால் தான் வீட்டில் இருந்து அங்கு ஓடி சென்று பார்த்தேன் என்றும், முனியம்மாள் புதிதாக கட்டி வந்த வீடு அருகில் வைத்து சரத்குமார், சரவணன், ஜானகி, குமாரவேல் ஆகியோர் தனது கணவரை மடக்கி எதிரி சரத்குமார் தன் கையில் வைத்திருந்த கட்டில் காலால் தனது கணவரின் தலையின் பின்புறம் அடித்தார் என்றும், 2 வது எதிரி சரவணன் நட்டு கழற்ற உதவும் ஸ்பேனரால் தனது கணவரின் வாயில் அடித்து தனது கணவரின் பல் எல்லாம் கொட்டி விட்டது என்றும், தனது கணவரின் கையிலும் எதிரி சரவணன் ஸ்பேனரால் அடித்தார் என்றும், தான் போய் தடுத்தேன் என்றும், அப்போது 3 வது எதிரி குமாரவேல், 4 வது எதிரி ஜானகி தன்னை மறித்து தள்ளிவிட்டார்கள் என்றும், அடி தாங்க முடியாமல் ஓடிய தனது கணவர் முனியம்மாள் வீட்டு பக்கத்திலேயே உள்ள வீட்டு அருகில் எதிரிகள் கும்பலாக மடக்கி தனது கணவரை செம அடி அடித்துவிட்டார்கள்

என்றும், அங்கிருந்தவர்கள் இங்கு வைத்து அடிக்காதீர்கள் என்று சொன்னார்கள் என்றும், தனது கணவரின் விநாயகர் கோவிலுக்கு அருகில் உள்ள தண்ணீர் டேங்க் அருகில் இழுத்து சென்றார்கள் என்றும், தனது கணவரை ஜட்டியுடன் நிற்க வைத்து தண்ணீரை ஊற்றி ஊற்றி 1 முதல் 4 எதிரிகள் அடித்தார்கள் என்றும், முக்கியமாக எதிரி சரத்குமார் ஒரு பந்தை காலால் அடிப்பதை போல் தனது கணவரை மாறி மாறி அடித்தார்கள் என்றும், (சாட்சி கண் கலங்குகிறார்) கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோர் வந்து விலக்கிவிட முயற்சி செய்தார்கள் என்றும், எல்லோரும் கூடுவதை பார்த்த எதிரிகள் ஆயுதங்களுடன் அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், தான் ஆம்புலன்ஸ் வரவழைத்து தனது கணவரை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றும், தனது கணவர் மருத்துவமனையில் தனது கணவர் சிகிச்சையில் இருக்கும்போது அவரிடம் விசாரித்தபோது எதிரிகளுக்கு பயந்து தான் திருக்கனூர், ஏரிக்கரையில் மறைந்து இருந்ததாக தன்னிடம் சொன்னார் என்றும், தனது கணவர் அங்கு இருப்பதை 1வது எதிரி சரத்குமார், 2வது எதிரி சரவணன், ஆகியோர் சரத்குமாரின் இருசக்கரவாகனத்தில் அங்கு சென்று தனது கணவரை பிடித்து கொண்டு வந்து தங்கள் வீட்டு அருகில் வைத்து தாக்கியதாக சொன்னார் என்றும், தனது கணவர் தாக்கப்பட்ட அன்று இரவு 1.00 மணிக்கு தனது கணவர் இறந்துவிட்டார் என்றும், தான் காலையில் விக்கிரவாண்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும், தான் கொடுத்த புகார் அசா.ஆ. 1. என்றும், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், எதிரி சம்பவத்தின் போது பயன்படுத்திய ஆயுதங்களை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், 1வது எதிரி சரத்குமார்

சம்பவத்தின்போது பயன்படுத்திய கட்டில் கால் தன்னிடம் காட்டப்படுகிறது என்றும், அ.சா.பொ-1. சம்பவத்தின்போது 3 வது எதிரி குமாரவேல் பயன்படுத்திய கட்டை தன்னிடம் காட்டப்படுகிறது என்றும், அது அ.சா.பொ.2. என்றும், 2 வது எதிரி சரவணன் சம்பவத்தின்போது பயன்படுத்திய ஸ்பேனர் தன்னிடம் காட்டப்படுகிறது என்றும், அது அ.சா.பொ.3.'' என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 திரு. கோபாலகிருஷ்ணன் தனது சாட்சியத்தில், ''அதன்பிறகு 25.04.2021-ந் தேதி பகல் 12.00 மணியளவில் எதிரிகள் சரத்குமார், சரவணன் ஆகியோர் ஐயப்பனை ஒரு பைக்கில் அடித்து அழைத்து தங்கள் ஊருக்குள் வந்தார்கள் என்றும், வீட்டு அருகில் வைத்து ஒரு உடைந்த கட்டில் கால் கொண்டு 1 வது எதிரி சரத்குமார் ஐயப்பனின் தலையில் அடித்தார் என்றும், 2 வது எதிரி சரவணன் ஒரு ஸ்பேனரை கொண்டு ஐயப்பனின் பல்லில் முதலில் அடித்தார் என்றும், அதன்பிறகு, ஐயப்பனின் கையிலும், 2 வது எதிரி சரவணன் அடித்தார் என்றும், பைக்கில் ஐயப்பனை எதிரிகள் பிள்ளையார்கோவில் இருந்து தான் அழைத்துவரும்போது அவர்களை தொடர்ந்து வந்தேன் என்றும், அதனால், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், ஐயப்பனை தாக்கிய பிறகு 3 வது எதிரி குமாரவேல் 4 வது எதிரி ஜானகி ஆகியோர் அங்கு வந்துவிட்டார்கள் என்றும், அசா.1 நதியா கத்திக்கொண்டே ஓடி வந்தார் என்றும், அவரை 3, 4 எதிரிகள் வழிமறித்து தள்ளிவிட்டார்கள் என்றும், வலி பொறுக்கமுடியாமல் ஐயப்பன் அங்கிருந்து ஓடி பழனி வீட்டு அருகில் விழுந்தார் என்றும், அங்கு எதிரிகள் 4 பேரும் சேர்ந்து ஐயப்பனை அடித்தார்கள் என்றும், அவர் மயக்கம் அடைந்துவிடாதபடி அங்கு பிடித்து

வைக்கப்பட்டிருந்த தண்ணீர் ஊற்றி அடித்தார்கள் என்றும், அங்கு இருந்தவர்கள் சத்தம் போட்டதால், 1, 2 எதிரிகள் ஐயப்பனை தரதரவென்று ஜட்டியோடு இழுத்து பிள்ளையார் கோவில் வாட்டர் டேங்க் அருகில் அழைத்து சென்றார்கள் என்றும், அங்கு வைத்தும் எதிரிகள் 4 பேரும் ஐயப்பனை அடித்தார்கள் என்றும், அப்போது தான் அவர்களை தடுத்துப்பார்த்தேன் என்றும், முடியவில்லை என்றும், தன்னை கெட்டவார்த்தைகளால் பேசியதால், அங்கிருந்து சென்று பிரகாஷ் என்பவரை தான் அங்கு அழைத்து வந்தேன் என்றும், மனைவி எதிரிகள் தனது நண்பர் ஐயப்பனின் மற்றும் கும்பல் வந்ததாலும், எதிரிகள் ஆயுதங்களுடன் அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும்", சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில் "என்னிடம் காட்டப்படும் அசா.பொ.1 கட்டில் கால் சம்பவத்தில் 1 வது எதிரி பயன்படுத்தியது என்றும், அ.சா.பொ.2 ஸ்பேனர் சம்பவத்தில் 2 வது எதிரி பயன்படுத்தியது ஆகும். அ.சா.பொ.3 கட்டை சம்பவத்தில் 3 வது எதிரி பயன்படுத்தியது ஆகும். அ.சா.1 நதியா தகவல் சொன்னபிறகு அரை மணி நேரத்தில் தான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன் என்றும், ஐயப்பன் தாக்கப்பட்ட அன்று இரவு 8.30 மணியளவில் அசா.1 நதியா புகார் கொடுக்க விக்கிரவாண்டி காவல்நிலையம் சென்று வந்ததாக அன்று இரவில் போன் செய்யும்போது தன்னிடம் சொன்னார் என்றும்," சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்கண்ட அ.சா.1: நதியாவின் சாட்சியம் (பாதிக்கப்பட்டவரின் மனைவி) மூலம் 2ம் எதிரியின் மனைவி விஜயகுமாரிக்கும், தனது கணவர் அய்யப்பனுக்கும் இடையே

ஏற்பட்ட தகராறுதான் இந்தப் பிரச்சனைக்குக் காரணம் என்பதும், சம்பவம் (25.04.2021): பகல் 12:00 மணியளவில் விநாயகர் கோவில் அருகில் எதிரிகள் அய்யப்பனைத் தாக்கினர் என்பதும், 1வது எதிரி (சரத்குமார்) கட்டில் காலால் தலையில் தாக்கினார். 2 வது எதிரி (சரவணன்) ஸ்பேனரால் வாயில் அடித்ததில் பற்கள் கொட்டின என்பதும், அ.சா.1 தடுக்கச் சென்றபோது 3 வது எதிரி (குமாரவேல்) மற்றும் 4 வது எதிரி (ஜானகி) அ.சா.1-யை தள்ளிவிட்டனர் என்பதும், எனவே இறந்த அய்யப்பனை கொல்ல வேண்டும் என்ற பொதுவான உத்தேசத்துடன் 3, 4 எதிரிகள் செயல்பட்டுள்ளனர் என்பதும், அய்யப்பனை ஜட்டியுடன் நிற்க வைத்து, தண்ணீர் ஊற்றி ஊற்றி அடித்தனர் என்பதும், மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அய்யப்பன் அ.சா.1 புகார்தாரரிடம், எதிரிகள் தன்னைத் திருக்கனூர் ஏரிக்கரையிலிருந்து பிடித்துக் கொண்டு வந்ததாகக் கூறினார் இறந்த அய்யப்பன் கூறினார் என்பதும், தெளிவாக நிரூபணம் ஆகிறது. மேலும் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கட்டில் கால் (அ.சா.பொ.1), கட்டை (அ.சா.பொ.2) மற்றும் ஸ்பேனர் (அ.சா.பொ.3) ஆகியவை சாட்சி நதியாவால் அடையாளம் காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சான்று பொருட்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.2: கோபாலகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் எதிரிகள் அய்யப்பனை பைக்கில் அடித்து இழுத்து வருவதைக் கண்டு அவர்களைப் பின்தொடர்ந்து சென்றதாகவும், 1வது மற்றும் 2 வது எதிரிகள் முறையே கட்டில் கால் மற்றும் ஸ்பேனரால் அய்யப்பனைத் தாக்கியதை நேரில் கண்டதாகவும் அய்யப்பனின் மனைவி நதியா கத்திக்கொண்டு வந்ததாகவும், அவரை எதிரிகள் தள்ளிவிட்டதாகவும்

சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர் அய்யப்பன் மயக்கமடையாமல் இருக்க தண்ணீர் ஊற்றித் தாக்கியதாகவும், பின்னர் அவரைத் தரதரவென்று வாட்டர் டேங்க் அருகில் இழுத்துச் சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவரும் அ.சா.பொ. 1 முதல் 3 வரையிலான ஆயுதங்களை அடையாளம் காட்டியுள்ளார். இந்த இரண்டு சாட்சியங்களும் கொலையின் கொடூரத்தையும், அய்யப்பனை கொலை செய்ய வேண்டும் என்ற எதிரிகளின் பொது உத்தேசத்தையும் (Common intention) தெளிவாக நிரூபணம் செய்கிறது.

இந்த வழக்கில் அ.சா.3: ராஜா (உறவினர் மற்றும் மகஜர் சாட்சி) சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து 25.04.2021 காலை 11:00 மணியளவில் திருக்கனூர் ஏரிக்கரை ஆலமரத்தடியில் 1 மற்றும் 2-வது எதிரிகள் அய்யப்பனைத் தாக்குவதையும், பின்னர் அவரை இருசக்கர வாகனத்தில் ஏற்றி ஊருக்குள் அழைத்துச் சென்றதையும் பார்த்ததாக தெரிவித்துள்ளார். இந்த வழக்கில் அ.சா.4 ஆன ஜெயகணேஷ் (அய்யப்பனின் மைத்துனர்) தனது சாட்சியத்தில், "2-வது எதிரி சரவணன் மற்றும் அவரது மனைவி விஜயகுமாரி தனது தங்கை நதியாவின் நடத்தைப் பற்றித் தவறாகப் பேசியதால் சண்டை ஏற்பட்டது என்றும், 25.04.2021 மதியம் 1:00 மணிக்கு நதியா போன் செய்து அய்யப்பனை எதிரிகள் அடிப்பதாகக் கூறினார். மாலை 4:30 மணிக்கு ஊருக்கு வந்து விசாரித்தபோது, 1 முதல் 4 வரையிலான எதிரிகள் அய்யப்பனைத் தாக்கியதை அறிந்தார் என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்கில் முக்கிய கண்ணுற்ற சாட்சியான அ.சா.5: பிரகாஷ் (பிறழ் சாட்சி)

என்பவர் தனது சாட்சியத்தில் "சம்பவம் குறித்து எதுவும் தெரியாது"என்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். இந்த வழக்கில் அ.சா.6: இளையராஜா தனது சாட்சியத்தில் "மதியம் 3:00 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்றபோது, அய்யப்பன் ஜட்டியுடன் இரத்தம் சொட்டச் சொட்ட விழுந்து கிடந்தார். அய்யப்பனை மீட்க முயன்றபோது 1-வது எதிரி (சரத்குமார்) பத்திரத்தில் கையெழுத்துப் போட்டால்தான் விடுவேன் என்றார். 4-வது எதிரி (ஜானகி) அய்யப்பனின் தலையில் இருந்த இரத்தக் காயத்தில் மண்ணை வாரிப் போட்டதாக" சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.7: முத்துகிருஷ்ணன் (அய்யப்பனின் மருமகன்) தனது சாட்சியத்தில், அ.சா.2 தகவலின் பேரில் அங்கு சென்றபோது, அய்யப்பன் இரத்த வெள்ளத்தில் கிடந்ததைப் பார்த்தார் என்றும், அய்யப்பனை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல அனுமதிக்குமாறு கெஞ்சியும், எதிரிகள் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக விடாமல் வாக்குவாதம் செய்தனர். பின்னர் காவல்துறையினர் வந்த பிறகே ஆம்புலன்ஸில் ஏற்ற முடிந்தது." என்று சாட்சியமளித்துள்ளார்.

18) இந்த வழக்கை பொறுத்தவரையில், புகார்தாரர் அ.சா.1 நதியா மற்றொரு கண்ணுற்ற சாட்சி அ.சா.2 கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள். மேற்படி நபர்களின் சாட்சியங்களில் குறுக்கு விசாரணையில் எதிரிகள் தரப்பில் வாதிடுவது போல, சிறு சிறு முரண்பாடுகள் இருந்தாலும், அந்த முரண்பாடுகள் சாட்சிகளின் சாட்சியத்தை பாதிக்கும் வகையில் அமையவில்லை. மேலும் அ.சா.1 கண்ணுற்ற மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சி என்பதால் அவரது சாட்சி அப்பழுக்கற்ற சாட்சியாகும்.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Naresh@Nehru (Vs) state of Haryana in CRL.A.No.1786 of 2023 dated 09-10-2023 என்ற வழக்கின் முன் தீர்ப்பில்

2023 LiveLaw (SC) 880

Naresh @ Nehru v. State of Haryana

மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

9.3 As noticed hereinabove, the evidence of the eye-witness should be of very sterling quality and calibre and it should not only instil confidence in the court to accept the same but it should also be a version of such nature that can be accepted at its face value. This Court in the case of Rai Sandeep @ Deepu alias Deepu Vs. State (NCT of Delhi)(2012) 8 SCC 21 has held:

"22. In our considered opinion, the "sterling witness" should be of very high quality and calibre whose version should, therefore, be unassailable. The court considering the version of such a witness should be in a position to accept it for its face value without any hesitation. To test the quality of such awitness, the status of the witness would be immaterial and what would be relevant is the truthfulness of the statement made by such a witness. What would be more relevant would be the consistency of the statement right from the starting point till the end, namely, at the time when the witness makes the initial statement and ultimately before the court. It should be natural and consistent with the case of the prosecution qua the accused. There should not be any prevarication in the version of such a witness. The witness should

be in a position to withstand the cross-examination of any length and however strenuous it may be and under no circumstance should give room for any doubt as to the factum of the occurrence, the persons involved, as well as the sequence of it. Such a version should have correlation with each and every one of other supporting material such as the recoveries made, the weapons used, the manner of offence committed, the scientific evidence and the expert opinion. The said version should consistently match with the version of every other witness. It can even be stated that it should be akin to the test applied in the case of circumstantial evidence where there should not be any missing link in the chain of circumstances to hold the accused guilty of the offence alleged against him. Only if the version of such a witness qualifies the above test as well as all other such similar tests to be applied, can it be held that such a witness can be called as a "sterling witness" whose version can be accepted by the court without any corroboration and based on which the guilty can be punished. To be more precise, the version of the said witness on the core spectrum of the crime should remain intact while all other attendant materials, namely, oral, documentary and material objects should match the said version in material particulars in order to enable the court trying the offence to rely on the core version to sieve the other supporting materials for holding the offender guilty of the charge alleged."

என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது. மேற்படி வழிகாட்டுதலின்படி புகார்தாரர் மற்றும் மற்ற கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியம் அமைந்துள்ளது என்று அரசு தரப்பில் வாதம்

முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழிகாட்டுதலை இந்த வழக்கில் இந்த நீதிமன்றம் பணிந்து பின்பற்றுகிறது.

19 ) மாண்புமிகு உச்சநீதிமன்றம் Shahaja@Shahajan Ismail Mohd.shaikh (Vs) The state of Maharashtra on 14 July 2022 in CRL.A.No.739 of 2017 என்ற வழக்கில் கண்ணுற்ற சாட்சியங்களின் தரத்தை குறித்து கீழ்க்கண்ட விதிமுறைகளை அளித்துள்ளது. அதன் அடிப்படையில் பார்க்கும்போது,

2022 LiveLaw (SC) 596

IN THE SUPREME COURT OF INDIA

CRIMINAL APPELLATE JURISDICTION

SURYA KANT; J., J.B. PARDIWALA; J.

CRIMINAL APPEAL NO. 739 OF 2017; JULY 14, 2022

SHAHAJA @ SHAHAJAN ISMAIL MOHD. SHAIKH versus STATE OF MAHARASHTRA

என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம்

27. The appreciation of ocular evidence is a hard task. There is no fixed or straight-jacket formula for appreciation of the ocular evidence. The judicially evolved principles for appreciation of ocular evidence in a criminal case can be enumerated as under:

I. While appreciating the evidence of a witness, the approach must be whether the evidence of the witness read as a whole appears to have a ring of truth. Once that

impression is formed, it is undoubtedly necessary for the Court to scrutinise the evidence more particularly keeping in view the deficiencies, drawbacks and infirmities pointed out in the evidence as a whole and evaluate them to find out whether it is against the general tenor of the evidence given by the witness and whether the earlier evaluation of the evidence is shaken as to render it unworthy of belief.

II. If the Court before whom the witness gives evidence had the opportunity to form the opinion about the general tenor of evidence given by the witness, the appellate court which had not this benefit will have to attach due weight to the appreciation of evidence by the trial court and unless there are reasons weighty and formidable it would not be proper to reject the evidence on the ground of minor variations or infirmities in the matter of trivial details.

III. When eye-witness is examined at length it is quite possible for him to make some discrepancies. But courts should bear in mind that it is only when discrepancies in the evidence of a witness are so incompatible with the credibility of his version that the court is justified in jettisoning his evidence.

IV. Minor discrepancies on trivial matters not touching the core of the case, hypertechnical approach by taking sentences torn out of context here or there from the evidence, attaching importance to some technical error committed by the investigating officer not going to the root of the matter would not ordinarily permit rejection of the evidence as a whole.

V. Too serious a view to be adopted on mere variations falling in the narration of an incident (either as between the evidence of two witnesses or as between two statements of the same witness) is an unrealistic approach for judicial scrutiny.

VI. By and large a witness cannot be expected to possess a photographic memory and to recall the details of an incident. It is not as if a video tape is replayed on the mental screen.

VII. Ordinarily it so happens that a witness is overtaken by events. The witness could not have anticipated the occurrence which so often has an element of surprise. The mental faculties therefore cannot be expected to be attuned to absorb the details.

VIII. The powers of observation differ from person to person. What one may notice, another may not. An object or movement might emboss its image on one person's mind whereas it might go unnoticed on the part of another.

IX. By and large people cannot accurately recall a conversation and reproduce the very words used by them or heard by them. They can only recall the main purport of the conversation. It is unrealistic to expect a witness to be a human tape recorder.

X. In regard to exact time of an incident, or the time duration of an occurrence, usually,people make their estimates by guess work on the spur of the moment at the time of interrogation. And one cannot expect people to make very precise or reliable estimates in such matters. Again, it depends on the time-sense of individuals which varies from person to person.

XI. Ordinarily a witness cannot be expected to recall accurately the sequence of

events which take place in rapid succession or in a short time span. A witness is liable to get confused, or mixed up when interrogated later on.

XII. A witness, though wholly truthful, is liable to be overawed by the court atmosphere and the piercing cross examination by counsel and out of nervousness mix up facts, get confused regarding sequence of events, or fill up details from imagination on the spur of the moment. The subconscious mind of the witness sometimes so operates on account of the fear of looking foolish or being disbelieved though the witness is giving a truthful and honest account of the occurrence witnessed by him.

XIII. A former statement though seemingly inconsistent with the evidence need not necessarily be sufficient to amount to contradiction. Unless the former statement has the potency to discredit the later statement, even if the later statement is at variance with the former to some extent it would not be helpful to contradict that witness.

[See Bharwada Bhoginbhai Hirjibhai v. State of Gujarat, 1983 Cri LJ 1096 : AIR 1983 SC 753, Leela Ram v. State of Haryana, AIR 1999 SC 3717, and Tahsildar Singh v.State of UP, AIR 1959 SC 1012]

28. To put it simply, in assessing the value of the evidence of the eyewitnesses, two principal considerations are whether, in the circumstances of the case, it is possible to believe their presence at the scene of occurrence or in such situations as would make it possible for them to witness the facts deposed to by them and secondly, whether

there is anything inherently improbable or unreliable in their evidence. In respect of both these considerations, the circumstances either elicited from those witnesses themselves or established by other evidence tending to improbabilise their presence or to discredit the veracity of their statements, will have a bearing upon the value which a Court would attach to their evidence. Although in cases where the plea of the accused is a mere denial, yet the evidence of the prosecution witnesses has to be examined on its own merits, where the accused raise a definite plea or puts forward a positive case which is inconsistent with that of the prosecution, the nature of such plea or case and the probabilities in respect of it will also have to be taken into account while assessing the value of the prosecution evidence.

என்று வழிகாட்டுதல் வழங்கியுள்ளது. மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில் சாட்சியமானது முந்தைய வாக்குமூலத்திற்கு சற்று முரணாக அமைந்திருந்தாலும், அதை வைத்து மட்டுமே நம்பத்தகுந்த சாட்சியத்தை நிராகரித்து விட முடியாது என்பது தெளிவாகத் தெரிய வருகிறது. இந்த வழக்கை பொறுத்தவரையில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1 சாட்சி சம்பவத்தின் போது தள்ளிவிடப்பட்ட நபர் என்பதால், அவரது சாட்சியம் மிகவும் நம்பத்தகுந்தது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அவரது சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் அமைந்துள்ள அ.சா.2 கண்ணுற்ற சாட்சியத்தின் சாட்சியமும் நம்பகத்தன்மை உடையதுதான் என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மேற்கண்ட சாட்சிகளின் முந்தைய வாக்குமூல முரண்பாட்டை வைத்து மட்டுமே அவர்களது சாட்சியம் நம்பத்தகுந்ததல்ல என்ற முடிவிற்கு இந்த நீதிமன்றத்தால் வர இயலாது. எனவே இறுதியாக மேற்கண்ட

காரணங்களின் அடிப்படையில், எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட கொலை குற்றம், பொது உத்தேசம், உட்பட்ட குற்றச்சாட்டுகளானது புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எனினும் இந்த வழக்கில் அரசு தரப்பில் அரசு மருத்துவமனையில் 1 முதல் 3 எதிரிகள் ஒன்றாக இணைந்து குற்றமுறு சதி செய்தார்கள் என்பது குறித்து அரசு தரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. இதுகுறித்த சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே இ.த.ச.பிரிவு 120B(1) படி 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**20) கைப்பற்றுதல் மகசர், பார்வை மகசர், சான்று பொருட்கள் கைப்பற்றப்படுதல் ஆகியவற்றின் மூலமும், இது குறித்த சாட்சிகளின் மூலமும், எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?**

இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.3. ஆக விசாரிக்கப்பட்ட திரு.ராஜா தனது சாட்சியத்தில், “26.04.2021 தேதி காலையில் தானும் வழுதலூர் பக்கிரிபாளையம் கிராமத்தை சேர்ந்த ராஜ்குமார் என்பவரும், ஊர் பிள்ளையார் கோவிலில் நின்று கொண்டிருந்தோம் என்றும், விக்கிரவாண்டி போலீசார் அங்கு வந்து தங்கள் இடத்தை சம்பவ பார்வையிட்டார்கள் என்றும், நாங்கள் அருகில் சென்று காலை 6.00

மணியளவில் பார்த்தோம் என்றும், தங்களை சாட்சியாக இருக்குமாறு சொன்னார்கள் என்றும், நாங்கள் கையொப்பம் போட்டோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை உள்ள 2 வது சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும், முதல் கையொப்பம் ராஜ்குமார் என்பவருடையது என்றும், போலீசார் பார்வை எழுதிய பிறகே தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அந்த பார்வை மகசர் அசா.ஆ.2. இரத்தம் படிந்த சிமெண்ட் காரை, இரத்தம் படியாத சிமெண்ட் காரை முனியம்மாள் வீட்டு எதிரில் சிமெண்ட் ரோட்டில் எடுத்தார்கள் என்றும், அதன்பிறகு தங்கள் ஊர் கோவில் அருகிலும் இரத்தம் படிந்த மண், மற்றும் இரத்தம் படியாத மண் ஆகியவற்றையும் எடுத்தார்கள் என்றும், அதன்பிறகு தங்கள் ஊர் வாட்டர் டேங்க் தூணில் இரத்தம் படிந்திருந்தது என்றும், அதையும் உடைத்து இரத்தம் படிந்த மற்றும் இரத்தம் படியாத வாட்டர் டேங்க் தூண் பகுதியை உடைத்து எடுத்து கைப்பற்றினார்கள் என்றும், போலீசார் அவ்வாறு கைப்பற்றியதற்கு தனித்தனியாக கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதில் தானும், ராஜ்குமாரும், சாட்சி கையொப்பம் போட்டோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் 3 கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள 2 வது கையொப்பங்கள் தன்னுடையது என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர்கள் முறையே அசா.ஆ.3 முதல் 5 வரை என்றும், தன்னிடம் காட்டப்படும் சான்று பொருட்கள் தான் அன்று கைப்பற்றப்பட்டவை என்றும், இரத்தம் படிந்த சிமெண்ட் காரை, இரத்தம் படியாத சிமெண்ட் காரை முறையே அ.சா.பொ.4, 5 ஆகும் என்றும், இரத்தம் படிந்த மண், மற்றும் இரத்தம் படியாத மண் முறையே அ.சா.பொ.6, 7 ஆகும் என்றும், இரத்தம் படிந்த மற்றும் இரத்தம் படியாத வாட்டர் டேங்க் தூண் பகுதிகள் முறையே அ.சா.பொ.8, 9 என்றும், பின்னர் சம்பவம் குறித்து போலீசார் தங்களை விசாரித்தார்கள் என்றும், தான்

நடந்ததை சொன்னேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 (ராஜா) ஒரு முக்கியமான மகசர் சாட்சியாவார். அவர் 26.04.2021 அன்று காலை 6:00 மணியளவில் விக்கிரவாண்டி போலீசார் முன்னிலையில், முனியம்மாள் வீட்டு சிமெண்ட் சாலை, பிள்ளையார் கோவில் மற்றும் வாட்டர் டேங்க் ஆகிய இடங்களில் இரத்தம் படிந்த மண் மற்றும் சிமெண்ட் காரைகளைச் சேகரித்தபோது சாட்சியாக இருந்து கையொப்பமிட்டுள்ளார். அவர் மூலம் (சான்று பொருட்கள்: அ.சா.பொ. 4 முதல் 9 வரை) கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.3 ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக அமைந்திருந்தாலும், அ.சா.3-ன் சாட்சியம் சம்பவ இடத்தில் இரத்தம் சிந்தியிருப்பதை உறுதி செய்கிறது. சிமெண்ட் காரை மற்றும் வாட்டர் டேங்க் தூணில் இருந்த இரத்தம் அய்யப்பனுடைய ரத்த வகையோடு ஒத்துப்போகிறதா? என்பதை அறிவியல் ரீதியாக நிரூபிப்பது (Forensic Report) இந்த வழக்கின் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்த மிக அவசியம். ஆனால் அது போன்று இந்த வழக்கில் அரசு தரப்பில் உறுதி செய்யப்படவில்லை.

இந்த வழக்கில் அ.சா.8 திருக்கனூர் ஏரிக்கரை சம்பவ இடத்தைப் பார்வையிட்டதற்கான பார்வை மகஜர் (அ.சா.ஆ.6) சாட்சி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் போலீசார் வரைபடம் மற்றும் மகஜர் தயாரித்தபோது தான் அங்கு இருந்ததாக உறுதிப்படுத்தியுள்ளார். அ.சா.9 பெரியசாமி ஒரு பிறழ் சாட்சி (Hostile Witness) ஆவார். அவர் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், போலீசார் தன் முன்னிலையில்

யாரையும் விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசுத் தரப்புக்கு எதிராகச் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.10 மாரியம்மன் கோவிலில் குறி சொல்லும் நபர் ஆவார். இவரும் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். எதிரிகளைத் தனக்குத் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

இந்த வழக்கில் அ.சா.11 பச்சையப்பன் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் (அ.சா.ஆ. 7 முதல் 12 வரை) உள்ள தனது கையெழுத்தை ஒப்புக்கொண்டார். இருப்பினும், "தான் காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பமிட்டதாகவும், எதிரிகள் ஆயுதங்களைக் கொடுத்ததை நேரில் பார்க்கவில்லை என்றும் கூறி, பகுதியளவு பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். முக்கியமான மகஜர் சாட்சிகளான அ.சா.9 மற்றும் அ.சா.10 பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளது அரசுத் தரப்புக்கு ஒரு பின்னடைவாகும். அ.சா.11 கையெழுத்தை ஒத்துக்கொண்டாலும், "காவல் நிலையத்தில் வைத்து கையொப்பமிட்டேன்" என்று கூறியிருப்பது, பிரிவு 27 (Indian Evidence Act)-ன் கீழ் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட முறையைச் சந்தேகத்திற்குள்ளாக்குகிறது. எவ்வாறு இருப்பினும் இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சான்று பொருட்களான கட்டில் கால் (அ.சா.பொ.1), கட்டை (அ.சா.பொ.2) மற்றும் ஸ்பேனர் (அ.சா.பொ.3) ஆகியவை கண்ணுற்ற சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி அ.சா.9 முதல் அ.சா.11 வரையிலான நபர்கள் பிறழ் சாட்சியமாக மாறியுள்ளது அரசு தரப்பு வழக்கை எந்த வகையிலும் பாதிக்காது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மருத்துவ மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள கொலை

குற்றச்சாட்டை நிரூபணம் செய்துள்ள நிலையில், கைப்பற்றுதல் மகசர், பார்வை மகசர், சான்று பொருட்கள் கைப்பற்றப்படுதல் ஆகியவற்றின் மூலமும், இது குறித்த சாட்சிகளின் மூலமும், எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**21) காவல்துறை அதிகாரிகளின் சாட்சியங்களின் மூலம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதா?**

இந்த வழக்கில் விசாரணை அதிகாரி (Investigating Officer) அ.சா.15 திரு. எஸ்.ஆறுமுகம் அவர்களின் சாட்சியம் மிகவும் முக்கியமானது. ஏனெனில், குற்றச் சம்பவம் நடந்தது முதல் இறுதி அறிக்கை (Charge Sheet) தாக்கல் செய்தது வரையிலான முழு புலனாய்வுச் சங்கிலியையும் (Chain of Events) இவரது சாட்சியமே இணைக்கிறது. மேற்படி அ.சா.15 தனது சாட்சியத்தில் "25.04.2021 அன்று உதவி ஆய்வாளர் பதிவு செய்த எப்.ஐ.ஆர்-ஐ பெற்றுக்கொண்டு விசாரணையைத் தொடங்கியதாகவும், நதியா, கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகிய சாட்சிகள் அடையாளம் காட்டிய சம்பவ இடத்தை (சிவபெருமான் பாளையம் பிள்ளையார் கோவில் அருகில்) அன்று இரவே பார்வையிட்டதாகவும், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்குச் சென்று, அய்யப்பனின் விபத்து பதிவேட்டை (அ.சா.ஆ.18) பெற்றது குறித்தும், 25.04.2021 அன்று நள்ளிரவு 01.00 மணியளவில் அய்யப்பன் இறந்துவிட்ட தகவல் கிடைத்தவுடன், வழக்கின் சட்டப்பிரிவுகளை கொலை முயற்சி (Sec 307 IPC) என்பதிலிருந்து கொலை (Sec 302 IPC) என மாற்றம் செய்து பிரிவு மாற்ற

அறிக்கை (அ.சா.ஆ.19) தாக்கல் செய்தார் என்றும்,

மேலும் அ.சா.15 இரண்டு வெவ்வேறு இடங்களை ஆய்வு செய்து தடயங்களைச் சேகரித்துள்ளதாகவும், சம்பவ இடம் 1 (முனியம்மாள் வீடு அருகில்): மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.20) மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததாகவும், இங்கிருந்து இரத்தக் கறை படிந்த சிமெண்ட் காரை, சாதாரண காரை மற்றும் 6 இன்ச் கட்டை (சா.பொ.10) ஆகியவற்றைக் கைப்பற்றியதாகவும், சம்பவ இடம் 2 (திருக்கனூர் ஏரிக்கரை) மாரியம்மன் கோவில் அருகில் வரைபடம் (அ.சா.ஆ.21) மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததாகவும், சம்பவ இடம் 3 (பழனி வீடு அருகில்): இரத்தக் கறை படிந்த மண், சாதாரண மண் மற்றும் இரத்தக் கறை படிந்த செங்கல் ஆகியவற்றை மகசர் (அ.சா.ஆ.4) மூலம் கைப்பற்றியதாகவும், 26.04.2021 அன்று முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தி, அறிக்கை (அ.சா.ஆ.22) தயாரித்ததாகவும், பின்னர் பிரேதப் பரிசோதனைக்காக காவலர் வெங்கடேசன் (அ.சா.13) மூலம் அனுப்பி வைத்ததாகவும்,

மேலும் அ.சா.15 26.04.2021 மதியம் 01.00 மணியளவில் பனையபுரம் சந்திப்பில் வைத்து எதிரிகள் 1 முதல் 4 வரை (சரத்குமார், சரவணன், குமரவேல், ஜானகி) கைது செய்யப்பட்டனர் என்றும், எதிரிகள் 1, 2, 3 அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் (அ.சா.ஆ.23, 24, 25) அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதுடன், ஆயுதங்களை மறைத்து வைத்த இடத்தையும் கூறினர் என்றும், 1ம் எதிரியிடமிருந்து ஹோண்டா எக்ஸ் பிளேடு இருசக்கர வாகனம் மற்றும் இரத்தக் கறை படிந்த கட்டில்

கால் (சா.பொ.1) கைப்பற்றியதாகவும், 2 ம் எதிரியிடமிருந்து இரத்தக் கறை படிந்த இரும்பு ஸ்பேனர் (சா.பொ.3) கைப்பற்றியதாகவும், ஒரு பக்கம் எரிந்த நிலையில் இருந்த கட்டை (சா.பொ.2) கைப்பற்றியதாகவும், தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து இரத்தப் பகுப்பாய்வு அறிக்கைகளை (அ.சா.ஆ.30) பெற்றதாகவும், அனைத்து சாட்சிகளையும் (நேரில் பார்த்தவர்கள், மகசர் சாட்சிகள், மருத்துவர்) விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும்,

விசாரணையின் முடிவில், எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(பி), 364, 323, 324, 302, 120(பி), 352, 34, 109 ஆகியவற்றின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி அ.சா.15 சாட்சியத்துடன் மற்ற சாட்சிகளை ஒன்றாக இணைந்து பரிசீலனை செய்து பார்க்கும்போது, குற்ற நிகழ்வு, கைது, ஆயுத மீட்பு, மற்றும் மருத்துவ சான்று ஆகிய அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பொருந்தி சங்கிலித் தொடர் நிகழ்வுகள் போன்று அமைந்துள்ளது. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட கட்டை, செங்கல் மற்றும் எதிரிகள் கொடுத்த கட்டில் கால், ஸ்பேனர் ஆகியவை காயங்களுடன் ஒத்துப்போகின்றன. மேலும் அ.சா.13 முதல் நிலை காவலர், வெங்கடேசன் பிரேதத்தை அடையாளம் காட்டியது, பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தது மற்றும் உள்ளுறுப்புகளை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.14 ஆய்வாளர் (அப்போதைய உதவி ஆய்வாளர்), பரணிதரன் அ.சா.1 நதியா கொடுத்த புகாரைப் பெற்று, கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.17) பதிவு செய்தது குறித்து சாட்சியம்

அளித்துள்ளார். மேற்படி அ.சா.15 விசாரணை அதிகாரி (ஆய்வாளர்), ஆறுமுகம் வழக்கின் முழு புலனாய்வு, சம்பவ இடப் பார்வை, தடயங்கள் சேகரிப்பு, சட்டப்பிரிவு மாற்றம், எதிரிகள் கைது, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஆயுதங்கள் மீட்பு (Recovery) குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் இந்த வழக்கில் அ.சா.14-ன் சாட்சியப்படி, சம்பவம் நடந்த 25.04.2021 அன்று இரவு 08.30 மணிக்கே புகார் பெறப்பட்டு எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது வழக்கு புனையப்பட்டதல்ல என்பதையும், காவல்துறை உடனடியாகச் செயல்பட்டதையும் காட்டுகிறது. விசாரணை அதிகாரி (அ.சா.15) சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடங்கள் (அ.சா.ஆ.20, 21) மற்றும் பார்வை மகசர்களைத் தயார் செய்துள்ளார். சம்பவ இடத்தில் இருந்து இரத்தக் கறை படிந்த சிமெண்ட் காரை, செங்கல் மற்றும் 6 இன்ச் கட்டை ஆகியவற்றை முறையாகக் கைப்பற்றியுள்ளது குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்துகிறது. எதிரிகள் 1 முதல் 3 வரை அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், அவர்கள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்கள் மற்றும் வாகனம் மீட்கப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டது எதிரிகளின் குற்றத்தன்மையை நேரடியாக உறுதிப்படுத்தும் வலுவான சான்றாகும். அ.சா.13 மற்றும் அ.சா.15-ன் சாட்சியங்கள் மூலம், பிரேதப் பரிசோதனை மற்றும் தடய அறிவியல் ஆய்வக முடிவுகள் (அ.சா.ஆ.30) பெறப்பட்டுள்ள சங்கதி நிரூபணம் ஆகிறது. இது காயங்களுக்கும், மீட்கப்பட்ட ஆயுதங்களுக்கும் இடையிலான தொடர்பை (Corroboration) அறிவியல் பூர்வமாக நிரூபிக்கிறது. இந்த வழக்கில் காவல்துறை சாட்சிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட கடமைகளை (புகார் பதிவு முதல் இறுதி அறிக்கை தாக்கல் வரை) சட்டப்படியாகச் செய்துள்ளனர் என்பதும், குறிப்பாக, அ.சா.15-ன் புலனாய்வு, எதிரிகளின்

ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதன் தொடர்ச்சியாக கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் ஆகியவை எதிரிகள் மீதான கொலைக்குற்றச்சாட்டை உறுதி செய்யப்போதுமானதாக உள்ளது என்றே இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக இந்த வழக்கை பொறுத்தவரையில், சம்பவ இடங்களான அய்யப்பன் கடத்தி வரப்பட்ட திருக்கனூர் ஏரிக்கரை மற்றும் அவர் தாக்கப்பட்ட சிவபெருமான்பாளையம் விநாயகர் கோவில், வாட்டர் டேங்க் ஆகிய இடங்கள் சாட்சியங்கள் மற்றும் மாதிரி வரைபடங்கள் மூலம் அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளன. மேலும் 2 வது எதிரியின் மனைவி விஜயகுமாரிக்கும், இறந்த அய்யப்பனின் மனைவி நதியாவிற்கும் இடையே ஏற்பட்ட சண்டையில், அய்யப்பன் விஜயகுமாரியைத் தாக்கிவிட்டுத் தலைமறைவானார். இதனால் ஏற்பட்ட முன்விரோதமே இந்தக் கொலைக்குக் காரணம் என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த வழக்கில் அய்யப்பனின் மரணம் தற்செயலான விபத்தல்ல, அது தலையில் ஏற்பட்ட பலத்த காயங்களால் ஏற்பட்ட கொலை என்பதை பிரேதப் பரிசோதனை அறிக்கை (அ.சா.ஆ.13) மற்றும் மருத்துவரின் (அ.சா.12) சாட்சியம் உறுதிப்படுத்தியுள்ளது.

கண்ணுற்ற சாட்சிகளான இறந்தவரின் மனைவி நதியா (அ.சா.1) மற்றும் கோபாலகிருஷ்ணன் (அ.சா.2) ஆகியோரின் சாட்சியங்கள், எதிரிகள் அய்யப்பனைத் தாக்கிய விதத்தையும், பயன்படுத்திய ஆயுதங்களையும் (கட்டில் கால், ஸ்பேனர், கட்டை) தெளிவாக விவரித்துள்ளன. மகசர் சாட்சிகள் (அ.சா.9, 10, 11) பிறழ் சாட்சிகளாக மாறிய போதிலும், கண்ணுற்ற சாட்சிகளின் வலுவான சாட்சியங்கள் மற்றும் அறிவியல் பூர்வமான தடயங்கள் எதிரிகளின் குற்றத்தை உறுதி செய்துள்ளன. எனவே எதிரிகள் 1

முதல் 4 வரையிலானவர்கள் மீதான கொலை, கடத்தல் மற்றும் பிற குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன. எனினும் 1 முதல் 3 எதிரிகள் அய்யப்பனைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார்கள் என்பதற்கான போதிய ஆதாரங்கள் இல்லாததால், IPC 120B(1) கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. மேலும் 1 முதல் 4 எதிரிகள் ஆபாச வார்த்தைகளால் திட்டினார்கள் என்பது சாட்சிய சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச.பிரிவு 294(b) படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இறுதியாக, 1 முதல் 4 எதிரிகள் இறந்த அய்யப்பனை பிள்ளையார் கோவில் வாட்டர் டேங்க் அருகில் தடுத்து நிறுத்தியதன் காரணமாக இதச பிரிவு . 341ன் படி 1 முதல் 4 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

